# ලංකා ආණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,917—1970 ජූලි 31 වැනි සිකුරාදා—1970.7.31

14,917 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூலை மாதம் 31ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 639 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 668 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 651 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 652 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 653 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 664 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவிதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.*

**எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

---

***(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.***

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியனைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவரவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

No. AB. 70/X.2259/70.

## சௌக்கியப் பகுதி

### *சௌக்கிய சேவை அதிபதி பதவி*

*சௌக்கிய சேவை அதிபதி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்களை நிரப்பி அவற்றைப் பின்வரும் திகதிகளன்று அல்லது அத்திகதிகளுக்கு முன்னர் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை (பப்ளிக் சேர்வீஸ் கொமிஷன்) அலுவலகம், தபாற்பெட்டி 500, கொழும்பு 1 என்ற விலாசத்துக்குச் சேரும்படி அனுப்புதல் வேண்டும் :—*

*(அ) உள்ளூர் விண்ண்ப்பங்கள் : 1970.8.14.*

*(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள் : 1970.8.21.*

***கவனிக்க.**—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவம் தேவைப்படுவோர் தபால் எழுதிக் கேட்க வேண்டியதுடன் 9×4 அங்குல அளவுக்குக் குறையாத அளவான முத்திரை ஒட்டப்பெறாத (என்வலப்) கடித உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். மேலும், இப்பத்திரத்தைக் கேட்டு எழுதும் பரீட்சார்த்தி தனது கடிதத்தில் தான் அரசாங்கசேவையில் உள்ள ஒரு உத்தியோகத்தரா இல்லையா என்பதையும் மிகத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.*

*(ii) ஒரு விண்ணப்பப் பத்திரம் அல்லது அத்தகைய பத்திரம் சம்பந்தமான ஒரு கடிதம் தபாலில் இழக்கப்பட்டது அல்லது தாமதமானது என்ற குற்றச்சாட்டு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தங்கள் விண்ணப்பங்களைக் கடைசி நாட்கள்வரை தாமதஞ் செய்யும் அபேட்சகர்கள் அதன் விளைவுகளுக்குத் தாமே பொறுப்பேற்க வேண்டும்.*

*(iii) கடல்கடந்த நாடுகளில் உள்ள அபேட்சகர்கள் இதற்கான அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்களை வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பிரதிநிதிகளது கந்தோர்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் விரும்பினால், தமது விண்ணப்பத்தை இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபை (பப்ளிக் சேர்வீஸ் கொமிஷன்) செயலாளருக்குக் கிடைக்கச் செய்யும்படி தாம் வசிக்கும் நாட்டுக்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் வெளிநாட்டுப் பிரதிநிதி கந்தோருக்கு குறிப்பிட்ட காலத்துக்குள் அதனை அனுப்பிவைக்கலாம்.*

*(iv) **வைத்தியப் பரிசோதனையும், பயணச் செலவுகளும்.**— இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமிக்கப்படுவதற்கு வெளிநாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர்கள் உடற்தகுதியைப் பொறுத்தமட்டில் சேவைக்குத் தகுந்தவர்*

கள என்பதை ஆய்ந்தறியும் நோக்கத்தை முன்னிட்ட அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியத்தொழில் செய்வோரிடம் பரிசோதனை செய்விக்கச் செல்லுமாறு கேட்கப்படுவர். அத்தகைய பரிசோதனைக்கான கட்டணமும், அவர்கள் இலங்கைக்கு வருவதற்கான பயணச் செலவுத்தொகைகளும் அந்த உத்தியோகத்தர்களாலேயே செலுத்தப்படவேண்டும்.

2. அலுவல் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—

(அ) இப்பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றிச் சம்பளம் பெறும் தகுதி உள்ளதுமாகும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஏற்கெனவே அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளமுள்ள ஒரு நியமனம் வகிக்காதவராயின், அவர் இப்பதவியில் உறுதிப்படுத்தப்படுமுன்பு மூன்று ஆண்டுகள் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஏற்கெனவே அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளமுள்ள ஒரு நியமனம் வகிப்பவரானல், அவர் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பதிற்கடமையாற்ற நியமிக்கப்படக்கூடும்.

3. சம்பளங்களும், படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் வருமாறு.—

புதிதாகச் சேருவோருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 22,440—2×900—ரூபா 24,240.

முன் சேர்ந்தோருக்கு ஆண்டொன்றுக்கு ப. 1,600—50—ப. 1,750.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் தான்—

(அ) நற்குணமும், தேகாரோக்கியமும் உடையவரென்றும்,

(ஆ) 1970. 8. 14 ஆந் திகதியன்று 40 வயதுக்குக் குறையாதவரென்றும்,

(இ) 15 வருடங்களுக்குக் குறையாத ஒரு காலத்துக்கு வைத்தியத்தொழில் செய்பவராகப் பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன், குறைந்தது 1 ஆம் தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கு வேண்டிய தகைமைகளை உடையவரென்றும் திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

கவனிக்க.—(i) உயர்தகைமைகள், பரந்த அனுபவம், வைத்தியத் தாபனங்களின் நிருவாகத்தில் குறிப்பிடத்தக்க ஆற்றல் என்பவற்றைக்கொண்ட விண்ணப்பகாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ii) அரசகரும மொழியில் உள்ள தேர்ச்சி, ஒரு மேலதிக தகைமையாக இருக்கும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களுள் ஏதாவதொன்றை அல்லது முழுவதையும் கேட்கப்படும் நேரத்தில் அனுப்புமாறு கோரப்படுவர்.—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (கவனிக்க.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டம் அல்லது மிகக்கூடிய கல்விச் சான்றிதழ்.

(இ) இரண்டு நற்குணச் சான்றிதழ்கள். இவற்றிலொன்று கல்வி கற்ற தாபனத்தின் அதிபர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் சான்றிதழ்கள் அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ்கள் அல்லது அவ்விருவகைச் சான்றிதழ்களும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பவற்றில் சித்தியெய்திய உயர்பரீட்சைச் சான்றிதழ்.

கவனிக்க.—(i) விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்களோ, சாதனங்களின் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

(ii) சாதனங்களைக் கேட்கும்போது சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களது விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்கசேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் வேலை செய்யும் அரசாங்கப் பகுதிகளின் தலைமை அதிகாரிகளுக்கூடாக அனுப்பப்படவேண்டும். எனினும், அவர்கள் தம் விண்ணப்பத்தின் பிரதியொன்றை விண்ணப்பங்களை ஏற்பதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் (பப்ளிக் சேர்வீஸ் கொமிஷன்) அரசாங்க சேவை அதிகாரசபைச் செயலாளருக்குக் கிடைக்கத்தக்கதாக நேரடியாக அனுப்பவேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் ('பி' அடையாளமிட்டு) விண்ணப்பகாரர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட தபாலட்டை இந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படலாம்.

7. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளும் அரசாங்க சேவை அதிகாரச்சபைச் செயலாளருக்கு விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இந்தப் பகுதியில் உள்ள எந்த உத்தியோகத்தரதும் சொந்தப் பெயர் விலாசத்துக்கு அனுப்பப்படக்கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் (கசெற்றின்) பகுதி I, தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் ('ஏ' அடையாளமிட்ட) அச்சிட்ட தபாலட்டையை அதில் கேட்டிருப்பதற்கிணங்க நிரப்பி அனுப்புமாறு அபேட்சகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அங்ஙனம் அனுப்புமிடத்து அவர்களது விண்ணப்பப் படிவம் இக்கந்தோரில் கிடைத்ததைப்பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றாத அபேட்சகர்களுக்கு அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றியிருந்தும், விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் தினத்திலிருந்து மூன்று வாரங்களுள் அவை கிடைத்ததைப்பற்றிய அறிவித்தலைப் பெற்றுக் கொள்ளாத அபேட்சகர்கள் அவ்வறிவித்தல் கிடைக்கவில்லையென்பதை அரசாங்கசேவை அதிகாரச்சபைச் செயலாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். இந்த முன்னேற்பாட்டை நிறைவேற்றத் தவறுதல் விண்ணப்பகாரருக்கு அவரது விண்ணப்பத்தின் மீதுள்ள எந்த உரிமையையும் கவனத்துக்கெடுக்கும் விஷயம் பாதிக்கப்படுவதற்குக் காரணமாகும்.

டீ. ஏ. விஜேவர்தன,
பதிற் செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்கசேவை அதிகாரச்சபை அலுவலகம்,
தபாற்பெட்டி 500,
கால்பேஸ் செக்கிரட்டேரியட்,
கொழும்பு 1,
24. 7. 1970.

7-1132—31. 7. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917.

---

## இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி
## கட்டுபெத்தை மொறட்டுவை
### எந்திரவல்லுனன்—II ம் வகுப்பிற்கான பதவி

இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவையில் எந்திரவல்லுனன்—II ம் வகுப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவமுறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர், இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி, கட்டுப்பெத்தை, மொறட்டுவை என்ற விலாசத்திற்கு 1970 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் இருபத்தைந்தாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(அ) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரியின் இளைப்பாற்றுச் சம்பள உரிமை 7.2.1964 ம் திகதிய 633 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவுறும். மாதாந்த சம்பளத்தில் நியமதாரி மாற்றப்படுமிடத்து, இளைப்பாற்றுச் சம்பள உரிமை வழங்கப்படும்வரை அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுவாராயின், தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும்.

(இ) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படின், விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரியும் முறையில் நியமிக்கப்படுவர்.

(ஈ) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(உ) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

3. சம்பளத் திட்டம்.—

முதல் ஆறு மாத காலத்திற்கும் நாளொன்றுக்கு 8.00 ரூபா வீதமும் பின்னர் ரூபா 2,640—15×60—ரூபா 3,540 வருடாந்தம்.

4. கல்வித் தகைமைகளும் பிறவும்.—ஒவ்வொரு விண்ணப்பதாரி யும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகர மான சான்று காட்டவேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி யன்று குறைந்த பட்சம் 21 வயதுக்குக் குறையாதவரா யும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரச சேவையிலுள்ளோருக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேல் எல்லை அமையாது.

(ஆ) (i) அளவுத்திட்டம் ஒன்றினை 1/64" அளவுக்கு வாசித்துப் பின்னப் பரிமாணங்களை அளவிடக்கூடியதாய் இருக்க வேண்டும் (நுண்மாணியை வாசிக்கும் ஆற்றல் மேல திக தகைமையாகும்).

(ii) அவர் புரிய இருக்கும் பொருத்தல் வேலையில்—அதா வது பொது நீராவி, மோட்டர், டீசல், ஆலை எந் திரங்கள்—சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(iii) வரைதல்களை வாசித்து விளக்கம் கூறக்கூடியவராய் இருக்கவேண்டும்.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் மொத்தமாக 5 வருடங்களுக்குக் குறையாத II ம் வகுப்பு தொழிற் சேவை பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலனும் இருக்க வேண்டும். (பொறுப்புள்ள இருவரால் கொடுக்கப் பட்ட இரு நற்சான்றுப் பத்திரங்கள் இணைக்கப் படல் வேண்டும். இவற்றுள் ஒன்று அப்பகுதிக் கிராம சேவகரிடமிருந்து பெறப்படல் வேண்டும்).

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்த சேவையில் கடமையாற் றிய தொழிற்சேவை அங்கீகரிக்கப்பட்ட நிலைய மொன்றில் புரிந்த சேவையாக ஏற்றுக்கொள்ளப் படும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாத னங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்கவேண் டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித்தகைமைப் பத்திரம்.

(ஆ) பிறப்புப் பத்திரம்.

(இ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழினுட்பத் தகை மைப் பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்.

(ஈ) மேற்போந்த 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீக ரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத் தாட்சிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்கள்.

(உ) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட் சைத் தாரதரப் பத்திரம்.

(ஊ) இரு நற்சான்றுப் பத்திரங்கள். இவற்றுள் ஒன்று கிராம சேவையாளரினதாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—

(i) சாதனங்களையேனும் அவற்றின் பிரதிகளையேனும் இணைத் தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறு வோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி/நிலை யத் தலைவர்கள் மூலம் அனுப்பவேண்டும். எனினும் விண்ணப்பத் தின் ஒரு பிரதி நேரடியாக பணிப்பாளர், இலங்கைத் தொழினுட் பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவை எனும் விலாசத்திற்கும் அனுப்பப்படல் வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்று நியாயமான காரணங்களைக்காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக் குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக் குள் பெறத் தவறும் அபேட்சகர்கள் பணிப்பாளர், இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி, கட்டுப்பெத்தை, மொறட்டுவை என்பவ ருக்கு அதுபற்றி உடனே அறிவிக்கவேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரிகள் தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படமாட் டாது.

எல். எச். சுமணதாசா,
பணிப்பாளர்.

இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி,
கட்டுபெத்தை,
மொறட்டுவை,
1970 ம் ஆண்டு யூலை மீ 20 ந் உ.

எந்திரவல்லுனன்—II ம் வகுப்பு பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் (தெளிவாக) :———.

2. நிரந்தர விலாசம் :———.

3. சொந்த இடம் :———

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது :———. பிறந்த திகதி :———.

5. பின்வருவோர் பிறந்த இடம் —

(அ) விண்ணப்பதாரி :———.

(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :———.

(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :———.

(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :———.

6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினுல பதிவு காரணமாகவா ? :———.

7. கல்வித் தகைமைகள் —

(i) பொது :———.

(ii) தொழில் தகைமைகளும் தொழினுட்பத் தகைமைகளும்: ———.

(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை: ———.

8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (உ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம் வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்படவேண்டும்) :———.

9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :——.

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக் காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙன மாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் :———.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வள வுக்கு :———.

12. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் :——.

13. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின் —

(அ) படைக்கூற்றின் பெயர் :———

(ஆ) வகித்த பதவி :———.

(இ) சேர்ந்த, விலகிய திகதிகள் :———.

14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தி யோகம்—

(அ) வகித்த பதவி :———.

(ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள் :———.

(இ) விலகியதற்கான காரணம் :———.

15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர். சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றை யும் குறிப்பிடவும் :———.

16. தற்போதைய உத்தியோகம் :———.
நிலையம் :———.

(அ) பதவிப் பெயரும் தரமும் :———.

(ஆ) நியமனத் திகதி :———.

(இ) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிக மானதா, சமயோசிதமா ? :———.

(ஈ) தற்போதைய சம்பளமும் சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் :————.

(உ) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. வேறு யாதேனும் விவரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதி பகர்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)
எனது எண் :
உங்கள் எண் :

நிரந்தரக் காரியதரிசி, க. க. அ. அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின் முன்/ * பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது. ————இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பம் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

————
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் :————

திகதி :————.

* பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

7-1141—31. 7. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917.

---

## இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி

### கட்டுபெத்தை, மொறட்டுவை

### தச்சுத் தொழிலாளன்—II ம் வகுப்பிற்கான பதவி

இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவையில் தச்சுத் தொழிலாளன் II ம் வகுப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர், இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவை என்ற விலாசத்திற்கு 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இருபத்தைந்தாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(i) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரரின் இளைப்பாற்றுச் சம்பள உரிமை, 7. 2. 1964 ந் திகதிய 633 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவுறும். மாதாந்த சம்பளத்தில் நியமதாரி மாற்றப்படுமிடத்து, இளைப்பாற்றுச் சம்பள உரிமை வழங்கப்படும் வரை அரசினர் சேவை சேமலாபநிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுவராயின், தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படின். விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரியும் முறையில் நியமிக்கப்படுவர்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

3. சம்பளத் திட்டம்.—

முதல் ஆறுமாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூபா 8.00 வீதமும் பின்னர் ரூபா 2,640—15 × 60—3,540 வருடாந்தம்.

4. கல்வித் தகைமைகளும் பிறவும்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று குறைந்தபட்சம் 21 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரச சேவையிலுள்ளோர்க்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேல் எல்லை அமையாது.

(ஆ) (i) எழுத வாசிக்கத் தெரிதல் வேண்டும்.

(ii) அளவுத் திட்டமொன்றினை 1/16" அளவுக்கு வாசிக்கத் தெரிதல் வேண்டும்.

(iii) தச்சுத் தொழிலில் நல்லறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) பல்வேறு மரவகைகளின் தன்மைகளையும் உபயோகங்களையும் பற்றிய அறிவு இருத்தல் வேண்டும்.

(v) பல்வகைப் பிணைப்புக்களையும் அவற்றை தயார் செய்வதிலும் முழுத்திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

(vi) தொழிலைக் குறித்ததான எளிய வரைதல்களை வாசிக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் மொத்தமாக 5 வருடங்களுக்குக் குறையாத II ம் வகுப்பு தொழில் சேவை பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலனும் இருக்க வேண்டும். (பொறுப்புள்ள இருவரால் கொடுக்கப்பட்ட இரு நற்சான்றுப் பத்திரங்கள் இணைக்கப்படல் வேண்டும். இவற்றுள் ஒன்று அப்பகுதிக் கிராம சேவகரிடமிருந்து பெறப்படல் வேண்டும்).

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்த சேவையில் கடமையாற்றிய தொழிற் சேவை அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் புரிந்த சேவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) ஆகக் கூடிய கல்வித் தகைமைப் பத்திரம்.

(ஆ) பிறப்புப் பத்திரம்.

(இ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழினுட்பத் தகைமைப் பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்.

(ஈ) மேற்போந்த 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத்தாட்சிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்கள்.

(உ) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(ஊ) இரு நற்சான்றுப் பத்திரங்கள். இவற்றுள் ஒன்று கிராம சேவையாளரினதாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—

(i) சாதனங்களையேனும் அவற்றின் பிரதிகளையேனும் இணைத்தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி/நிலையத்தலைவர்கள் மூலம் அனுப்பவேண்டும். எனினும் விண்ணப்பத்தின் ஒரு பிரதி நேரடியாக பணிப்பாளர், இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவை எனும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத்தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்று நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபாரிசு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெறத் தவறும் அபேட்சகர்கள் பணிப்பாளர், இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவை என்பவருக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரிகள் தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பர்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படமாட்டாது.

எல். எச் சுமணதாசா,
பணிப்பாளர்.

இலங்கைத் தொழினுட்பக் கல்லூரி,
கட்டுபெத்தை, மொறட்டுவை.
1970. 7. 20.

**தச்சுத் தொழிலாளன்—II ம் வகுப்பு பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் (தெளிவாக) :————.

2. நிரந்தர விலாசம் :————

3. சொந்த இடம் :————.

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது :————.
பிறந்த திகதி :————

5. பின்வருவோர் பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பதாரி :————.

(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.

(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————

(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————

6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினலா பதிவு காரணமாகவா ? :————.

7. கல்வித் தகைமைகள் :—

(i) பொது :————.

(ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும்:

(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை :

8. அறிவித்தலின் 4 ம் பந்தியில் (உ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்) :————.

9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :————

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அழிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் :————.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு :————.

12. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் :————.

13. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின் :————.

(அ) படைக்கூற்றின் பெயர் :————.

(ஆ) வகித்த பதவிகள் :————.

(இ) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.

14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம் :————.

(அ) வகித்த பதவி :————.

(ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.

(இ) விலகியதற்கான காரணம் :————.

15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

16. தற்போதைய உத்தியோகம் :————.
நிலையம் :————.

(அ) பதவிப் பெயரும் தரமும் :————.

(ஆ) நியமனத் திகதி : ————.

(இ) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா :————.

(ஈ) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் :————.

(உ) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)

எனது எண் :
உங்கள் எண் :

நிரந்தரக்காரியதரிசி, க. க. அ. அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின் முன்/*பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.
.................................... இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/*பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பம் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

————.
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் :.............................

திகதி :————.
*பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

7-1142—31. 7. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917.

---

ஓ. எம்./4/1/124

**வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் வெற்றிடம்**

**சோவியத்து சோசலிச குடியரசுக் கூட்டாட்சியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இலங்கை வெளிநாட்டு சேவையில் "சி" வகுப்புப் பதவி**

சோவியத்து சோசலிச குடியரசுக் கூட்டாட்சியில் மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதகரத்தில் எழுந்துள்ள இலங்கை வெளிநாட்டுச் சேவையின் "சி" வகுப்புப் பதவி ஒன்றின் வெற்றிடத்தின் பொருட்டு இலங்கை அரசாங்க சேவையில் சேவைக்கமர்த்தப்பட்டுள்ள "அலுவலக அலுவல் உதவியாளர்" களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பகாரர்கள் நிரந்தரமானோரும் இளைப்பாற்றிச் சம்பளத்திற்கு உரித்துடையோருமாக இருப்பதுடன் தம் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டும் இருத்தல் வேண்டும்.

1970, ஓகத்து மாதம் 14 ஆம் திகதியன்று 35 ஆண்டுகளுக்கு மேற்படா வய்தினராகவும் மணமானவராகவும் இருத்தல் வேண்டும்.

மோட்டார் வாகனங்கள் செலுத்துதலில் செயல்முறை அனுபவம் உடைய, சாரதி உத்தரவுச் சீட்டு வைத்திருக்கும் "அலுவலக அலுவல் உதவியாளர்" களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. இப்பதவிக்குத் தெரிவு செய்யப் பெறுபவர் மூன்றாண்டு காலத்திற்குக் கடல் கடந்த சேவைபுரியுமாறு வேண்டப்படுவர். தனது பதவிக்குரிய (முன்னைய) அடிப்படைச் சம்பளத்தை அவர் தொடர்ந்து பெறுவதுடன் கடல் கடந்த சேவை பிரமாணக் குறிப்புகளின் நியதிகளுக்கு அமைய, கடல் கடந்த சேவைப்படி, அணியடுக்குப்படி ஆகியவற்றையும் மேலதிகமாகக் கொடுக்கப் பெறுவர்.

3. இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பெறும் ஆள், கடல் கடந்த சேவைக்கு ஏற்ற உடல் நலத் தகுதியுடைமை தொடர்பாக ஒரு வைத்திய பரிசோதனைக்கு ஆளாகும் வண்ணம் வேண்டப்படுவர்.

4. இதற்குரிய பட்டோலையிலுள்ள படிவ உருவிலமைந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரரின் திணைக்களத் தலைவருக்கு ஊடாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும் ; நிரந்தரச் செயலாளர், பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, மூதவைக் கட்டடம், கொழும்பு 1. விண்ணப்பத்தில் கொடுக்கப்பெற்றுள்ள விபரங்கள் சரியானவை எனவும், விண்ணப்பதாரர் தனது பதவியில் உறுதிப்படுத்தப் பெற்றுள்ளவரும், நிரந்தர இளைப்பாற்றிச் சம்பளத்திற்கு உரித்துடையவருமான "அலுவலக அலுவல் உதவியாளர்" ஒருவர் எனவும் திணைக்களத் தலைவர் சான்றுபடுத்துதல் வேண்டும். அத்தலைவர், விண்ணப்பதாரரின் கடல் கடந்த சேவைக்குரிய தகுதிபற்றிய விதந்துரை ஒன்றை வழங்குவதோடு. தெரிவு செய்யப்பட்டால், விண்ணப்பதாரர் தனது ந

போதைய வேலையிலிருந்து விடுவிக்கப்படக்கூடுமோ என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

5. முன்பு இவ்வமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பங்கள் கவனிக்கப்பெறு.

6. விண்ணப்பங்கள் 1970, ஓகத்து மாதம் 14 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன் இவ்வமைச்சை வந்தடைதல் வேண்டும்.

வி. எல். பீ. மெண்டிஸ்,
நிரந்தரச் செயலாளருக்காக,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
மூதவைக் கட்டடம், கொழும்பு-1.
1970, யூலை 20 ஆம் திகதி.

### வரைவு
### பட்டோலை

1. விண்ணப்பகாரரின் (அ) குடும்பப் பெயர் :————.
(ஆ) ஏனைய பெயர்கள் :————.
2. (அ) பிறந்த தேதி :————.
(ஆ) 1970, ஓகத்து 14 அன்று வயது :————.
3. முகவரி (அ) அலுவலகம் :————.
(ஆ) சொந்த முகவரி :————.
4. தேசிய இனம் :————.
5. விவாகமானவரா அல்லவா ? :————.
6. விவாகமானவராயின் குழந்தைகளின் எண்ணிக்கையும் அவ்வவர் வயதும் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. பாடசாலையை விட்டது முதல் இதுகாறும் செய்த தொழில்கள் :————.
9. "அ. அ. உ." ஆகச் சேர்ந்த திகதி :————.
10. "அ. அ. உ." ஆக உறுதிப்படுத்தப்பட்ட திகதி :————.
11. தற்போதைய ஆண்டுச் சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் :————.
(முன்னைய) அடிப்படைச் சம்பளம் :————.
திரட்டிய சம்பளம் :————.
12. மோட்டார் வாகனச் சாரத்திய அனுபவம் :————.
13. எவையேனும் பிற தகைமைகள் :————.

மேலே கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானவை என அத்தாட்சிப் படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :

7-1055—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917.

---

### கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளே கிழக்கு, அவிசாவெலே பட்டினசபைப் பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த கேவாகம் கோறளே கிழக்கு, அவிசாவெலே பட்டினசபைப் பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1970 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31 ம் திகதியிலோ அன்றி அதற்கு முன்னதாகவோ ஹேவாகம் கோறளே கிழக்கு, ஹன்வெல பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2 தீர்க்கமான சம்பளம் இப்பதவிக்குக் கிடையாது, திடீர் மரணங்களின்போது இடம்பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 7.50 தரப்படும்.

தகைமைகள் : ஒவ்வொரு விண்ணப்பதாரும் தாம்,

(அ) விண்ணப்ப முடிவு தேதியின்போது 30 வயதிற்கு மேற்பட்டவராகவும், 60 வயதிற்கு உட்பட்டவராகவும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,

(இ) அவிசாவெலே பட்டின சபை பகுதியின் நிரந்தரப் பிரஜையாகவும்,

(ஈ) (i) 1925 ம் ஆண்டுக்கும் 1944 ம் ஆண்டுக்கும் இடையே சிங்கள பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்கள பாடத்துடன் ஆங்கில பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்கள பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும்,

அல்லது

(ii) சிங்களப் பாடத்துடன் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்கவேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழ் கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்

(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள்

5. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபைகளில் கடமைபார்ப்பவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டி. டபிள்யூ. டீ. அல்விஸ்,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

கச்சேரி,
கொழும்பு.
1970, ஜூலை, 19.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்
### கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளே கிழக்கு, அவிசாவெலே பட்டினசபைப் பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்.

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :————.
2. விலாசம் :————.
3. நிரந்தர வசிப்பிடமும், வதியும் கால எல்லையும் :————.
4. (அ) விண்ணப்ப முடிவு தேதியின்போது சரியான வயது :—
(ஆ) பிறந்த திகதியும், இடமும் :————.
5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. தற்போதைய தொழில் :————.
8. முன்பு வேறு தொழில்கள் புரிந்திருப்பின் அவற்றின் விபரம் : ————.
9. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :————.
10. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் :— ————.
11. விண்ணப்பதாரி நீதி மன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :————.
12. இப்பதவிக்குத் தேவையான வேறு தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக :————.

என்னால் மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :

7-1060—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

அறிவிப்பாளர் தரம் 2 (சிங்களம்) பதவிக்கு இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள் : (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் இடைத்தேர்வுப் பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அதே தரத்திலான சிங்கள மொழியுடன் சித்தி எய்தியிருக்க வேண்டும் ; அல்லது
சிங்கள மொழியுடன் சிரேஷ்ட தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒலிபரப்பு ஸ்தாபனம் ஒன்றில் பகுதிநேர அறிவிப்பாளராக 3 வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும் : அல்லது
ஒலிபரப்பு நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட வேலையில் ஒப்பந்த ஊழியராக 3 வருடத்திற்குக் குறையாத ஒழுங்கான சேவையாற்றியிருக்க வேண்டும்.

இத்துடன், (ஆ) ஆழ்ந்த சிங்கள அறிவும் சுமாரான ஆங்கில அறிவும் பெற்றிருத்தல் வேண்டும் ;
(இ) இலக்கிய கலாசார விவகாரங்களில் போதிய அறிவும் தக்க திறனும் உலக விவகாரங்கள் பற்றிய அறிவும் பெற்றிருத்தல் வேண்டும் ;
(ஈ) சிறந்த தரத்திலான ஒலிவாங்கிக்கு ஏற்ற குரல், தோற்றம், ஏற்றுக்கொள்ளத்தக்க உச்சரிப்பு ஆகியன பெற்றிருத்தல் வேண்டும்.

வயது : 23—40 வயது.

சம்பள அளவு : ரூ. 450—675 (5 × 20—5 × 25). ரூ. 510 க்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை.

விண்ணப்பங்கள், மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு 1970 ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்குப் பிந்தாமல் இந்த அறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப் படிவத்திற்கமைய பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், அறிவிப்பாளர், தரம் 2, சிங்களம் என்று எழுதப்பட வேண்டும்.

கொழும்பு 7,
16 ஜூலை, 1970.

சுசில் முனசிங்ஹ,
மா அதிகாரி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

**.........................பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் : ————.
 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி என்பதைக் குறிப்பிடவும்) : ————.
 1.2. விலாசம் : ————.
2. பிறந்த திகதியும் இடமும் : ————.
 2.1. 15.8.1970 இல் வயது. (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட வேண்டும்).
3. தேசிய இனம் : ————.
4. கல்வியும் பயிற்சியும் : —

| கல்வி பெற்ற பாடசாலைகள்/நிறுவனங்கள் | திகதி | சித்திஎய்திய பரீட்சை | வகித்த பொறுப்புவாய்ந்த பதவிகள் |
|---|---|---|---|

5. சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை : —
 5.1. சிங்களம் : ————.
 5.2. தமிழ் : ————.
 5.3. ஆங்கிலம் : ————. (தராதரப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
6. அனுபவம் : முன்னைய அனுபவம், வேலை விபரங்கள் ஆகியவற்றின் கிரம ஒழுங்கு :—

| நிறுவனத்தின் பெயர் | வகித்த பதவி | திகதிகள் | இருந்து/வரை | விலகியதற்கான காரணம் |
|---|---|---|---|---|

7. உங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் நன்கு பழகியவர்களும் இனத்தவர்களும் அல்லாத 3 பேரின் பெயர், விலாசம், அந்தஸ்து ஆகியவை ;—
 7 1.————.
 7.2.————.
 7.3.————.
8. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியவர்களின் பெயர்களும், பதவிகளும் :—
 8.1.————.
 8 2.————.
 8.3.————.
9. வேறு விபரங்கள் : ————.
10. இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என்று நான் இத்தால் உறுதிப் படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் எதுவும் பொய்யானவை அல்லது தவறுனவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் தேர்வின் போது அதற்கு முன்னதாக தகுதியற்றவனுக்கப்படவோ அல்லது நியமனம் வழங்கப்பட்ட பின்னர் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடு எதுவும் இன்றி வேலை நீக்கம் செய்யப்படவோ முடியும் என்பதை நான் அறிவேன்.

திகதி : ————    ————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

7–1091—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## நெடுஞ்சாலைகள் திணைக்களம்

### அலுவலக உதவியாளர் பதவி—அரசாங்கத் தொழிற்சாலை

நெடுஞ்சாலைகள் திணைக்களத்தின் கொலன்னவையிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலைக்கு, அலுவலக உதவியாளர் பதவி ஒன்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1970 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.0 மணிக்குப் பிந்தாமல் கீழ்க்காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திலே விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

2. வேதனம்.—பதவிக்குரிய ஆண்டு வேதன அளவுத்திட்டம் ரூ. 6,600—180,—240—ரூபா 9,240. ஆண்டு வேதனம் ரூபா 7,500ம், ரூ. 8,280 ம் வருவதற்கு முன் வினைத் திறமைகாண் தடையுண்டு.

3. நியமன நியதிகள்.—(i) பதவி நிரந்தரமானது ; உபகார வேதனத்திற்குரியது. பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர் வி.அ.உ.ச. நிதிக்கு உதவு தொகை கொடுத்தல் வேண்டும்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஒரு வருட காலத்திற்கு தற்காலிக சேவையில் அமர்த்தப்படுவார். சேவை உறுதிப்படுத்தியபின் விண்ணப்பதாரர் அரசாங்க எழுதுவினைஞர் சேவை அங்கத்தவர் பதவியிலிருந்தோ அல்லது திணைக்கள எழுதுவினைஞர் சேவை அங்கத்தவர் பதவியிலிருந்தோ உடன் விலக்கப்பட்டவராவர். இதன் பின்பு இச் சேவைகளுக்குரிய சலுகைகள் இவருக்கு வழங்கப்படமாட்டாது.

4. வேண்டிய தகைமைகள் :

(அ) விண்ணப்பகாரர் அரசாங்க எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்றுத் தரம் II அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும். அல்லது இதற்குச் சமமான திணைக்கள எழுதுவினைஞர் சேவையில் ஆண்டொன்றுக்கு ரூபா 5,304 க்கு குறையாத சம்பளமுடையவர்களாக இருக்கவேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர், நிர்வாக அனுபவம் உடையவரென்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிகளிலும் நடைமுறைப் பிரமாணங்களிலும் நிதிப் பிரமாணங்களிலும், தொழிலாளருடன் சம்பந்தமுடைய பிரமாணங்களில் பூரண அறிவும் வல்லமையுமுடையவரென்று திணைக்களத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் சிறந்த நல்லொழுக்கமுடையவராகவும், உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் குறைந்தது சிரேஷ்ட தராதரப்பத்திரத்தில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதனிலும் கூடிய தராதரப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும். சிங்களத்தில் வேலை செய்யக்கூடிய போதிய ஆற்றல் உடையவராயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் படிவங்களை (மூல இதழ்களை அல்ல) விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர் கல்விச் சான்றிதழ்.

6. திணைக்களத்தலைவரால் குறிப்பிட்டுள்ள தேதிக்கு முந்திக் கிடைக்கப்பெற்று திணைக்களத்தால் தாமதப்படுத்தப்பட்டதற்கு திணைக்களத் தலைவரால் போதிய காரணம் காட்டப்பட்டாலன்றி, குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. விண்ணப்பமோ, அன்றி வேறு ஏதாவது இது சம்பந்தமான தொடர்பான கடிதங்களோ, பணிப்பாளர், முகாமைக் கிளை, பெருந் தெருக்கள் திணைக்களம், கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமே அன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தரின் சொந்த முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன அவற்றைப் பார்க்கவும்.

என். ஜி. விக்கிரமசிங்க,
நெடுஞ்சாலைகள் திணைக்களப் பணிப்பாளருக்காக.

நெடுஞ்சாலைகள் திணைக்களம்,
கொழும்பு,
1970 யூலை, 19.

**நெடுஞ்சாலைகள் திணைக்கள அரசாங்க தொழிற்சாலை அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

1. முழுப் பெயர் (தனியெழுத்துகளில்) :————
(அ)
(ஆ) மற்றைய பெயர் :————

2. அஞ்சல் முகவரி :————

3. 18.8.70 இல் சரியான வயது :
———— வருடம் ———— மாதம்.
(ஆ) பிறந்த திகதியும் இடமும் :————.

4. கல்வித் தகைமைகள் :————.
(சித்தியெய்திய உயர்கல்வித் தராதரம்)

5. (அ) அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் நிறைவேற்றுத் தரம் II ச் சார்ந்தவரா அல்லது அதற்குச் சமமான திணைக்கள எழுதுவினைஞர் சேவையைச் சார்ந்தவரா எனக் குறிப்பிடுக :————

6. (அ) தற்போது வகிக்கும் பதவி :————
(ஆ) தற்போதைய வேதனமும் அதன் அளவும் :————
(இ)

7. (அ) சிங்களத்தில் வேலை செய்யக்கூடிய ஆற்றல் உடையீரா ? :————
(ஆ) சிங்களத்தில் சித்தியெய்திய உயர் பரீட்சை :————

8. அறிவித்தலில் 4 ஆம் பந்தி ஆ பிரிவின்படி பூரண விபரங்களையும் அனுபவத்தையும் குறிப்பிடுக :————
(திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப் படவேண்டும்)

9. புதிய நியமனத்தில் தெரிவுசெய்யப்பட்டால் நீர் தற்போதுள்ள உத்தியோகத்திலிருந்து விலகவும் எல்லாவிதமான உரிமைகளையும் இழக்கவும் விருப்பமோ ? :————

10. வேறு ஏதாவது விபரங்கள் :————

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலுள்ள விபரங்களில் ஏதுவாயினும் பொய்யாகவோ பிழையாகவோ இருப்பது கண்டுபிடிக்கப்படின் அவ்வாறு கண்டுபிடிப்பது தெரிவுக்கு முன்னராயின், தெரிவிற்குரிய என் தகமைகளை இளப்பேன் என்பதையும் நியமனம் செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————

7-1050—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

**சௌக்கியத் திணைக்களம்**

**முகாரி பதவி, மின்-வைத்தியச் சாதனங்கள் தரம் I**
**மின்-வைத்தியப் பொறியியற் பிரிவு**

சௌக்கியத் திணைக்களத்தின் மின்-வைத்தியப் பொறியியற் பிரிவின் முகாரி (போர்மன்) மின்-வைத்தியச் சாதனங்கள் தரம் I என்ற ஒரு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் உள்ளவாறு தயாரித்து நிரப்பப்பட்டு 22.8.1970 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் சௌக்கிய சேவை அதிபதி, தபாற்பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்துக்குக் கிடைக்கும்படி அனுப்பப் பட வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இந்தப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,600—8×180—ரூபா 8,040.

3. **வயதெல்லை.**—விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும், 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**கவனிக்க.**—ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை விதிக்கப்படவில்லை.

4. **கல்வித் தகைமைகளும், பிற தகைமைகளும்**

**(அ) கல்வித் தகைமைகள்**

(i) கணிதம் (மதமற்றிக்ஸ்), பௌதிகவியல் என்பவற்றுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம், அல்லது

(ii) சிங்களம்/தமிழ்ப்பாஷை, கணிதம்(மதமற்றிக்ஸ்), பௌதிகவியல் உட்பட ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளுள் பெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர)ப் பத்திரம்.

**(ஆ) தொழிநுட்பத் தகைமைகள்**

(i) இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழிநுட்ப உத்தியோகத்தர்(மின்தொழில், இயந்திரத்தொழில்) சான்றிதழ் வைத்திருக்க வேண்டியதுடன் மின்தொழில் (எலெக்றிக்கல்)/இலத்திரவியல் (எலெக்ற்ரேனிக்ஸ்) பொறியியல் அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும். அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்பக் கல்லூரி அல்லது தாபனத்தில் மின்பொறியியல் அன்றேல் பிரயோக இயந்திரவியல் வகுப்பில் சிற்றி அன்ட் கில்ட் தரம் III அல்லது அதற்குச் சமமான பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தமைக்குச் சான்றிதழ்களை ஆதாரமாக வைத்திருப்பதுடன் மின்தொழில் (எலெக்றிக்கல்)/இலத்திரவியல் (எலெக்ற்ரேனிக்ஸ்) பொறியியலில் அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**கவனிக்க.**—மேலே பந்தி (ஆ)வில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளுடன் குறைந்தது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் உள்ள சௌக்கியத் திணைக்கள உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கத் தகுதி உள்ளவர்களாவர்.

5. **நியமன நியதிகள்**

இந்தப் பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றிச் சம்பளம் உள்ளதுமாகும். தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் விதவை, அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளை அல்ல) அவர்களின் விண்ணப்பங்களுடன் அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்கென வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது). பிறப்புப் பதிவு செய்யப்படாதவர்களின் விடயத்தில், பதிவாளர் தலைமை அதிபதியால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் அல்லது விசேட சான்றிதழ் வயதுக்கு அத்தாட்சியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஆ) பெற்றுள்ள உயர் கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.

(இ) பெற்றுள்ள தொழிநுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(ஈ) விண்ணப்பகாரரின் குணத்துக்கு அத்தாட்சியாக அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள அபேட்சகர்களின் அத்தகைய நற்சாறிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் சேவைசெய்யும் அந்தந்தத் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்த விளம்பரத்தின் தேவைகளைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு அம்சத்திலும் சரியாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் (கசெற்றின்) பகுதி I, தொகுதி II இன் ஆரம்பத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எல். டபிள்யு. குணவர்த்தன,
பிரதி அதிபதி (நிருவாகம்),
சௌக்கியசேவை அதிபதிக்காக.

சௌக்கியசேவை அதிபதி அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
தபாற்பெட்டி 500,
கொழும்பு 1,
70.7.10.

### விண்ணப்பப் படிவம்

முகாரி பதவி, மின்-வைத்தியச் சாதனங்கள் தரம் I
மின்-வைத்தியப் பொறியியற் பிரிவு

1. முழுப்பெயர் :————.
(தனித்தனி எழுத்துக்களில்)
2. தற்போதைய விலாசம் :————.
3. பிறந்த திகதியும், விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதியன்று வயதென்ன வென்பதும் :————.
பிறந்த திகதி :— வருடங்கள்—— மாதங்கள்—— நாட்கள்——.
4. தேசிய இனம் :————
பாரம்பரையான இலங்கையரா அல்லது பதிவுசெய்யப்பட்ட இலங்கையரா
5. தற்போது வகிக்கும் தொழில், ஏதாவதிருப்பின் :————.
6. கல்வித் தகைமைகள் :————.
(சித்தியெய்திய பரீட்சையையும், பாடங்களையும் குறிப்பிடுக)
7. தொழிநுட்பத் தகைமைகள் :————.
(சித்தியெய்திய பரீட்சையைக் குறிப்பிடுக)
8. பெற்ற அனுபவத்தின் விபரங்கள் :————.
9. வேறு உரிமைக் கோரிக்கைகளின் விவாங்கள் :————.

இந்த விண்ணப்பத்தில் நான் சமர்ப்பித்துள்ள விவரங்கள் உண்மையானவையும், சரியானவையுமென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன், இதில் காணப்படும் விவாங்களில் எதுவும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமைநீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும், நியமனத்துக்குப் பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலையினின்று நீக்கப் படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

7-1052—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14.917

---

### ஆயுள்வேத திணைக்களம்

பட்டதாரி வைத்தியர்களைச் சிறப்பறிஞர்களாகப் பயிற்றுவிப்பதற்கான புலமைப் பரிசில்கள்

சிறப்புத் துறைகளில் பட்டதாரி வைத்தியர்களைப் பயிற்றுவிப்பதற்கான புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கு ஆயுள்வேத திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கண் நோய்கள்.
2. முறிவுகள்—பொருத்து விலகல்கள்,
3. சரும நோய்கள்.
4. கொதிப்பு, புண், கழலை.
5. பாம்புக்கடி.

சிறப்பறிஞர்களை இச்சிறப்புத் துறைகளில் பயிற்றுவிப்பதற்கு மட்டுமே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். மரபுவழி வைத்தியர்கள் வசமுள்ள தொன்மைவாய்ந்த மருத்துவ முறையினை பட்டதாரி வைத்தியர்களுக்குப் புகட்டுவதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

2. **தேவைப்படும் தகைமைகள்**

(அ). டி. ஏ. எம். எஸ்./டி. ஐ. எம். எஸ். பட்டம் வழங்கப்படுவதற்கு ஆயுள்வேதக் கல்லூரியினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையில் முதல் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்திபெற்றவராயிருத்தல் வேண்டும். இறுதிப் பரீட்சைக்கு எடுத்த பாடங்களில் 60 வீதத்திற்கு மேல் புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

அப்பாடங்களாவன.—

(1) கண் நோய்—இறுதிப்பரீட்சை
..............................அறுவைச் சிகிச்சைப் பாடங்கள்.
(2) முறிவுகளும், பொருத்து விலகல்களும்—இறுதிப் பரீட்சை—அறுவைச் சிகிச்சைப் பாடங்கள்.
(3) சரும நோய்கள்—இறுதிப்பரீட்சை—நிதானமும் உடல் வைத்தியமும்.
(4) கொதிப்பு, புண், கழலை—இறுதிப்பரீட்சை—அறுவைச் சிகிச்சை பாடங்கள்.
(5) பாம்புக்கடி—இறுதிப்பரீட்சை—நஞ்சுகள்.

(இப்பாடங்களில் 60 வீதத்திற்கு மேல் புள்ளிகள் பெறப்பட்டன என அதிபரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரமொன்று பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).

(ஆ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகியவற்றுள் பொருத்தமான பாடத்தில் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் அதிவிசேட அல்லது சிறப்புச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஆயுள்வேதத்திற்குச் சிங்களமும், சித்தவைத்தியத்திற்கு தமிழும், உனானி வைத்தியத்திற்கு ஆங்கிலமும்).

(இ) ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், ஹிந்தி அல்லது உருது மொழிகளில் அறிவுடமை கூடுதலான தகைமையாகக் கருதப்படும்.

(ஈ) 20. 8. 1970 இல் 35 வயதுக்கு மேற்பட்டவாயிருத்தல் கூடாது.

(உ) விண்ணப்பகாரர்கள் யாவரும் தொழில் செய்பவரல்லாதவர்களாகவும், திருமணமாகாதவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பகாரர்கள் யாவரும் இலங்கையராக இருத்தல் வேண்டும். இலங்கையர் என்பது பிறப்புரிமையுடையவர்களையும், பதிவு செய்யப்பட்டவர்களையும் கருதும்.

4. தேகாரோக்கியமும், மனவலிமையும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

5. தகுதிபெறும் விண்ணப்பகாரர்கள் இத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு அல்லது எழுத்துப் பரீட்சைக்கு அல்லது இரண்டுக்கும் தோற்றும்படி வேண்டப்படுவர். அதற்காகிய திகதியும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும். இதன் தொடர்பாகப் பயணச் செலவு அல்லது பிற கொடுப்பனவுகள் எதுவும் கொடுக்கப்படமாட்டா.

6. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் அவர்கள் தெரிந்தெடுத்த சிறப்புத்துறைகளில் குறித்த காலத்திற்கு இத்தீவில் சிறந்த வைத்தியர்களின்கீழ் பயிற்சிபெறுதல் வேண்டும்.

7. இப்புலமைப் பரிசில்களின் கால எல்லை இருவருடங்களாகும். பயிற்சிக் காலத்தில் எல்லாம் அடங்கிய படியாக மாதமொன்றுக்கு 100 ரூபா பயிற்சி பெறுபவர்களுக்குக் கொடுக்கப்படும். பயிற்சியை இடையில் நிறுத்துபவர்கள் படியாகப் பெற்ற முழுத்தொகையையும் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

8. இரு அல்லது நான்கு சிறப்பறிஞர்களான வைத்தியர்களினுல் பயிற்றப்படுவதற்கு வசதிகள் அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுபவர்கள் ஆயுள்வேத திணைக்களம் விதிக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

9. பயிற்சியின் முடிவில் ஒவ்வொரு மாணவனும் தான் பயிற்றப்பட்ட சிறப்புத்துறையில் நூல் ஒன்றினைத் தயாரித்து இத்திணைக்களத்திற்கு வழங்குதல் வேண்டும். படிப்பையும் பயிற்சியையும் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என நிரூபிக்கப்பட்ட பின்னரே அவர் சிறப்பறிஞராக ஏற்றுக்கொள்ளப்படுவர். பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்பவர்களுக்குப் பத்திரமொன்று இத்திணைக்களத்திஞல் வழங்கப்படும். இப்பத்திரம், பட்டத்திற்குப் பின்பெற்ற பத்திரமொன்ருகக் கருதப்படமாட்டாது. ஆனுல், திணைக்களத்தில் சிறப்பறிஞர்களான வைத்தியர்களை ஆட்சேர்க்கும்பொழுது இப்பத்திரங்களுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புலமைப் பரிசில்களுக்குரிய காலத்தின் முதல் ஆறு மாத காலத்திற்குள் பயிற்சி பெறுபவரின் முன்னேற்றம்பற்றிய அறிக்கை திருப்தியற்றதாகக் காணப்படுமிடத்து அல்லது அவர் பயிற்சிக் காலமாகிய இரு வருட காலத்திற்குள் திருமணம் செய்யுமிடத்து இப்புலமைப் பரிசில்கள் நிராகரிக்கப்படும்.

10. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் யாவரும் இந்த வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள சகல நிபந்தனைகளுக்கும் உடன்படுவதாக (50 சத முத்திரையின் மேல்) உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடல் வேண்டும்.

11. விண்ணப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறுன மாதிரிப் படிவங்களில் செய்யப் பெற்று ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேதத் திணைக்களம், கொழும்பு 8 என்ற முகவரியில் 20. 8. 1970 ஆந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பட்டதாரி வைத்தியர்களைப் பயிற்றுவிப்பதற்கான புலமைப் பரிசில்கள்" என்ற சொற்கள் எழுதப்படல் வேண்டும்.

விமல் நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு-8.
19. 7. 1970.

### மாதிரிப் படிவம்

### பட்டதாரி வைத்தியர்களை சிறப்பறிஞர்களாகப் பயிற்றுவிப்பதற்கான புலமைப் பரிசில்கள்

1. முழுப் பெயரும் (பெரிய எழுத்துக்களில்) :————.
   (அ) முதற் பெயர் :————.
   (ஆ) பிற பெயர்கள் :————.

2. சொந்த முகவரி :————.

3. நாட்டினம் :————.

4. பிறந்த திகதியும், இடமும் :————.
   (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி ஒன்று இணைக்கப்படல் வேண்டும்).
   (அ) 20. 8. 1970 இல் வயது :————.
   வருடங்கள்........மாதங்கள்........நாட்கள்........

5. பால் :————.

6. குடிசார் அந்தஸ்து :————.

7. கல்வித் தகைமைகள் :————.
   (அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).
   (1) சிங்களம் :————.
   (2) தமிழ் :————.
   (3) ஆங்கிலம் :————.

8. உயர் தொழிற்றகைமைகள் :————.
   (அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

9. தற்பொழுது தொழில் எதுவும் செய்கின்றீரா ? :————.
   அவ்வாருயின் அதன் விபரங்களைக் கொடுக்கவும் :————.
   உமக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டால் பயிற்சி பெறுவதற்கு அதிலிருந்து விலக முடியுமா ? :————.

10. மருந்துவம் தொடர்பான அனுபவமெதுவுமுண்டா ? :————.

11. பயிற்சிபெற விரும்பும் சிறப்புத்துறை :————.

12. இந்நோக்கத்திற்காக நீர் சேரவிரும்பும் சிறப்பறிஞர்கள் :–
   பதிவு செய்யப்பட்ட இலக்கம் :————.
   (அவர்களது சம்மதத்தைத் தெரிவிக்கும் கடிதம் இணைக்கப்படுதல் விரும்பத்தக்கது. போதிப்பவருக்கு மாதமொன்றுக்கு 100/- ரூபா படி கொடுக்கப்படும்).

13. குறிப்புகள் :————.

இதன்கண் என்னுல் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அவை பொய்யானவை அல்லது பிழையானவை என புலமைப்பரிசில் வழங்குவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், புலமைப் பரிசில் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவ்வுரிமை நிராகரிக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி :————.

7-1054—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## பெருவீதிகள் திணைக்களம்

### மின்சார முகாரிப்பதவி தரம் II

இத்திணைக்களத்தில் II ஆம் தர மின்சார முகாரிப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டு "பணிப்பாளர் பெருவீதிகள்" கிளை "இ" கொழும்பு என விலாசமிடப்பட்டு 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கப்படல் வேண்டும். 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதிய வர்த்தமானியில் காணப்பட்ட அறிவித்தலின்படி முன்னரே விண்ணப்பஞ் செய்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. இப்புதிய விளம்பரத்தின்படி ஏற்கப்படும் விண்ணப்பங்களுடன் இவர்களது முன்னைய விண்ணப்பங்களும் சேர்த்துப் பரிசீலனை செய்யப்படும்.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதனம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,728 என ஆரம்பித்து ஆண்டொன்றுக்கு ரூபா 144 ஆக அதிகரித்து ரூபா 5,456 வரை செல்லும் (திரட்டிய சம்பள அளவு).

3. (i) **ஒப்பந்த நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய நன்மைகொண்டதுமாகும். அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவு தொகை செலுத்தப்படவேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர் குறுகிய கால அறிவித்தலுடன் வேலை ஒப்புக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4. **வேண்டப்படும் தகைமைகள்**

(அ) க. பா. சா. பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான ஓர் பரீட்சையில் சித்தி எய்தியவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) கட்டடங்களில் அல்லது பின்வருவனவற்றில் ஏதாவதொன்றில் மின்சார அமைப்பு அல்லது நிறுவும் வேலையில் அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

ஏ. எச். கம்பிகள் அமைத்தலும் அது தொடர்பான மின்சார ஆளித்துணைப் பொறிகள், நிலத்தில் கீழ் அமைக்கப்படும் வடங்கள், மின்சார உயர்த்திகள், நீர் இறைக்கும் பம்புகள், காற்றுச்சீராக்கும் பொறிகள் மின்சாரக் கடத்திகள் எந்திரத்தால் இயங்கும் மின் உற்பத்திக் கருவிகளும் உபநிலைய மின்சார மாற்றிப் பொறிகள் போன்றவற்றில் அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் அல்லது உள்ளூர் ஆட்சிச் சேவையில் அல்லது நன்கு மதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் மேற்பார்வையாளர் தரத்தில் சேவை செய்தவராயிருக்க வேண்டும்.

(இ) (i) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது கட்டுப்பெத்தைச் செயல்முறைத் தொழில்நுட்ப நிலையத்தில் இரண்டாண்டுகள் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்) பயிற்சி நெறியை அனுகூலமாக முடித்திருக்க வேண்டும். அல்லது

(ii) அரசாங்க மின்சாரப் பொறுப்பேற்றற் திணைக்களத்தினுல் நடாத்தப்படும் மின்முகாரிப் பயிற்சி நெறிப் பயிற்சியை அனுகூலமாக முடித்துத் திணைக்களத்தின் III ஆம் தரச் சோதனையில் சித்தி யெய்தியவராயிருத்தல் வேண்டும் ; அல்லது

(iii) இலண்டன் சிரி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் மின்சார எந்திரவியற் செயல்முறை எ. சியும்படி சி. சோதனையில் இடைநிலைத்தரத்தில் சித்தி எய்தியவராயிருக்க வேண்டும் ;

அல்லது

(iv) இலண்டன் சிரி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் மின்சாரம் அமைத்தல் வேலை சோதனை செய்தல் சோதனையில் பி. அன்ட்சி பயிற்சி நெறிச்சோதனையில் சித்தி எய்தியவராய் இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பகாரர் 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக் கூடாமலும் இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயது மேலெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத் திணைக் களத்தில் II ம் தர மின்சார முகாரிப்பதவி வகிக்கும் விண்ணப்பகாரர் களுக்கு வயது மேலெல்லை மற்றும் கல்வித் தகைமை விலக்கப்பட்டுள்ளது.

5. **சேவை நிபந்தனைகள்.**—அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூல் ஒழுங்கு விதிகள் திணைக்களக் கட்டளைகள் அல்லது காலத்திற்குக் காலம் அரசாங்கத்தால் வழங்கப்படும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் என்பனவற்றிற்கு அமைவாகவே நியமனங்கள் யாவும் அமையும்.

6. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**நன்கு கவனிக்குக** சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிர மாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர்கல்வி மற்றும் தொழிநுட்பத் தகைமைச் சான்றிதழ்கள்

(இ) சேவை மற்றும் அனுபவம் என்பனவற்றை ஆதரிக்கும் சான்றி தழ்கள்.

7. அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்களின் விண்ணப் பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்களுக்கூடாகக் குறிப்பிடப்பட்ட திகதிக்குப்பின் இவ் அலுவலகத்தில் பெறப்பட்டவிடத்து அவை நிராகரிக்கப் படும் குறிப்பிட்ட திகதிக்கு முன் அவரவர் திணைக்களத் தலைவர்களால் பெறப்பட்டு அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பகுதித் தலைவர் தகுந்த காரணம்காட்டி சிபார்சு செய்தவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

8. விண்ணப்பங்கள் அல்லது அவை சார்பான கடிதத் தொடர்புகள் யாவும் பெருஞ்சாலைகள் பணிப்பாளர், கிளை "இ" மட்டுமேயன்றி வேறெந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைத்தல் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைவனவும் இவ்வரசாங்க வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவின் பிரசுரிக்கப்பட்டதுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் செலுத்தும்படி கோரப்படுகின்றது.

என். ஜி. விக்கிரமசிங்க,
பெருவீதிகள் பணிப்பாளருக்காக.

பெருவீதிகள் திணைக்களம்,
கொழும்பு 1.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**மின்சார முகாரிப்பதவி தரம் II ற்கான விண்ணப்பம்**
**பெருவீதிகள் திணைக்களம்**

1. முழுப்பெயர் : ———.
(தடித்த எழுத்துக்களில்)
(அ) சொந்தப் பெயர் : ———.
(ஆ) பிற பெயர்கள் : ———.
2. முகவரி : ———.
3. (அ) பிறந்த இடமும் திகதியும் : ———.
(பிறப்புச சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)
(ஆ) 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 22 ம் திகதியன்றுள்ள வயது : ———. ஆண்டுகள் : ——— மாதங்கள் :——
4. சாதியம் : ———.
5. பிறப்பிடம் : ———.
(அ) விண்ணப்பகாரரின் தந்தை : ———.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பாட்டன் : ———.
(இ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பூட்டன் : ———.
6. தற்போது தொழில் வகிப்பின் தொழிலின் பெயரையும் பெறும் வேதனத்தையும் குறிப்பிடுக : ———.
7. கல்வித் தகைமைகள் : ———.
(சித்தி எய்திய பரீட்சையின் பெயரைக் குறிப்பிடவும்).
8. தொழினுட்பத் தகைமைகள் : ———.
(சித்தியெய்திய பரீட்சையின் பெயரைத் தருக)
9. மின் அமைப்பு நிர்மாண வேலைகளில் முன் அனுபவம் பற்றிய விபரமும் நியமனமும் அவை சார்பான பிற விபரங்களும் : ———.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை யெனவும் சரியானவையுமெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானதென்றோ தவறானதென்றோ காணப்பட்டால் தேர்வுக்குப்பின் நான் தகைமை நீக்கம் செய்யப்படு வதற்கும் பாத்திரனுவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ———.

7-1120—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி

### தமிழ் மொழியில் நவீன மருத்துவம் கற்பிக்க பகுதி நேர விரிவுரையாளருக்கான பதவி

ஆயுள்வேதக் கல்லூரியில் நவீன மருத்துவப் பாடங்களை தமிழ் மொழி மூலம் கற்பிக்க ஒரு பகுதி நேர விரிவுரையாளர் தேவைப்படுகின்றது.

**தொழிற் தகைமை.**—விண்ணப்பதாரிகள் மேற்கத்திய வைத்தி யப் பட்டதாரிகளாக இருத்தல் வேண்டும். விரிவுரைகளை தமிழ் மொழி மூலம் ஆற்றும் வல்லமை உடையவராய் இருத்தல் வேண்டும்.

**விரிவுரைகள்.**—நாளொன்றுக்கு இரண்டு (2) மணித்தியாலங் கள் வீதம் வாரத்திற்கு பத்து (10) மணித்தியாலங்களாகும்.

**வேதனம்.**—மணித்தியாலமொன்றிற்கு ரூபா 15/- (பதினைந்து) வீதம் (எல்லாம் உட்பட) வழங்கப்படும்.

முழுத் தகைமைகளும் அனுபவங்களும் குறிக்கப்பட்ட விண்ணப் பங்கள் 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ந் திகதியிலன்றோ அல் லது அதற்கு முன்னரோ என்னை வந்தடையுமாறு அனுப்புதல் வேண்டும். (3.4.1970 ல் வெளியான வர்த்தமானிப் பிரகாரம் விண்ணப்பித்தவர்கள், திரும்பவும் புது விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும்).

பண்டிட் வில்லியம் அல்விஸ்,
அதிபர்.

ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,
பண்டாரநாயக்காபுர,
இராஜகிரியை,
22. 7. 1970.

7-1135—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அறிவித்தல்

### 1971 ஆம் ஆண்டு 1 ஆந் தரத்தில் பிள்ளைகளைச் சேர்த்தல்

1971 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் தரத்திற்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 31.1.71 அன்று 5 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அதாவது 1.1.71 க்கு முன் 4 வயது 11 மாதங்களைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

2. பிரவேசப் பரீட்சை ஒன்றும் நடைபெறாது.

3. பாடசாலைக்கும் பெற்றோரின் வதிவிடத்துக்கும் இடைப்பட்ட தூர அண்மை அடிப்படையிலேயே தெரிவு நடைபெறும்.

4. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் பெற்றோரின் வதிவிடத்துக்கு ஆகக் கிட்டவுள்ள பாடசாலைத் தலைவருக்கு 10.9.70 க்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் நேர்முகமாகக் கொடுபடின் அதனைப் பெற்றுக் கொண்டமையை ஒப்புக்கொள்ளும் கடிதம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இத்திகதிக்குப் பின் பாடசாலையில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

பி. உடகம,
நிரந்தரச் செயலாளரும் மகா வித்தியாதிபதியும்.

கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2, 22.7.1970.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

..............................பாடசாலையில் 1 ஆந் தரத்தில்
பிள்ளையைச் சேர்த்தற்கான விண்ணப்பம்

பிள்ளை பற்றிய விபரங்கள்—

1. பெயர் :————.
2. பால் :————. 3. போதனாமொழி :————.
4. பிறந்த திகதி : வரு. :————. மா :————. நாள். :————.

| | தாய் | தகப்பன்/சட்டபூர்வமான பராமரிப்பாளர் |
|---|---|---|
| 5. பெயர் : | | |
| 6. (அ) சாதியம் : | | |
| (ஆ) இனம் : | | |
| 7. சமயம் : | | |
| 8. வதிவிடம் (24 ஆம் இலக்கத் தொடர் அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தில் கொடுத்துள்ளபடி வீட்டிலக்கம், தெரு, பட்டணம், கிராம சேவகர் பகுதிப் பெயர்) : | | |
| 9. வதிவிடத்திலிருந்து பாடசாலைக்கு ஆகக் கிட்டிய தெருமூல தூரம் —சங்கிலியில் அண்ணளவில் : | | |
| 10. மேற்குறித்த விலாசத்தில் வதியத் தொடங்கிய திகதி : | | |
| 11. 10 ஆம் கூட்டில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு முன்னுள்ள விலாசம்: | | |

12. மேற்குறித்த பாடசாலையில் படிக்கும் சகோதரர்கள்/சகோதரிகள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | தரம் |
|---|---|

13. விண்ணப்பதாரி குறித்த பாடசாலையில் வேலையாளரா ? அங்ஙனமாயின் அந்தஸ்தும் நியமனத் திகதியும் :————.

14. உங்கள் பிள்ளை இப்பாடசாலையில் சேர்க்கப்படுவதற்கு தெரிவு செய்யப்படாவிடின், அவருக்கு இடம் காணும் பொருட்டு உங்கள் வதிவிடத்திலிருந்து கிட்டத்தட்ட 2 மைல் தூரத்துக்குளுள்ள 3 வேறு பாடசாலைகளை முன்னுரிமைக் கிரமப்படி குறிப்பிடவும் :

(1).————.
(2.)————.
(3).————

குறித்த பாடசாலைகளில் காலியிடங்கள் இல்லாவிடின் உங்கள் பிள்ளைக்கு இடம் காண்பதற்கு மக்கள் குழு/பிரதேச வித்தியாதிபதி/பிரதம வித்தியாதிகாரி கடமைப்பட்டவரல்லர்.

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவையென இத்தால் உறுதிப்படுத்துவதுடன் மேலே கொடுபட்டுள்ள விலாசத்தில் வதிவதை அத்தாட்சிப்படுத்துவதற்குத் திருப்தியான சான்று சமர்ப்பிக்கச் சம்மதிக்கிறேன் என்றும் மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையற்றவையெனக் காணப்படின் எனது பிள்ளையைப் பாடசாலையிலிருந்து நீக்கி கல்வித் திணைக்களம் அப்பகுதியில் குறிப்பிடும் ஒரு பாடசாலைக்கு அவரைச் சேர்த்தற்கு நான் சம்மதிக்கிறேன் எனவும் இத்தால் தெரியப்படுத்துகிறேன். மேலும், எனது பிள்ளை இப்பொழுது அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக்குச் செல்லவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

————————,
பெற்றோரின் கையொப்பம்.

திகதி :————.

7–1187—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் நிருவாக எழுதுவினைஞர் வகுப்பிலுள்ள உத்தியோகத்தர்களுக்குத் தேசிய மொழிகளிலும், கணக்கிலும் பரீட்சை—பெப்ருவரி, 1970

ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் பிரமாணக் குறிப்புகளின் பின்னிணைப்பு "இ" என்பதில் விதிக்கப்பட்டதும், 1970 பெப்ருவரி மாதம் 20 ஆந் தேதி நடாத்தப்பட்டதுமான பரீட்சையில் ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் நிருவாக எழுதுவினைஞர் வகுப்பிலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள பரீட்சார்த்திகள் அவர்களின் பெயர்களுக்கெதிராகக் குறிப்பிட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்துள்ளார்களெனப் பொது அறிவித்தலுக்காக இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

| பெயர் | வேலை செய்யுமிடம் | பாடங்கள் |
|---|---|---|
| சூரியதிலக, கே. சி. எல். | அரசாங்க ஆசுப்பத்திரி, நீர்கொழும்பு | சிங்களம் அ, ஆ |
| கதிரவேலுப்பிள்ளை, எஸ். | மேகநோய் தடுப்பியக்கம், கொழும்பு 10 | தமிழ் அ, ஆ |
| மனுவேல்பிள்ளை, ஜீ. எஸ். | பெரியாசுப்பத்திரி, யாழ்ப்பாணம் | தமிழ் அ, ஆ |
| முருகேசப்பிள்ளை, பி. | மார்புநோய் ஆசுப்பத்திரி, கந்தான | கணக்குகள், தமிழ் அ, ஆ |
| பத்மலிங்கம், கே. | பெரியாசுப்பத்திரி, இரத்தினபுரி | தமிழ் அ, ஆ |
| பெரேரா, ஏ. எஸ். | மார்புநோய் ஆசுப்பத்திரி, ருகம | சிங்களம் அ, ஆ |
| சிவரத்தினம், பி. | பெரியாசுப்பத்திரி, யாழ்ப்பாணம் | கணக்குகள் |
| சுப்பிரமணியம், எஸ். | பெரியாசுப்பத்திரி, யாழ்ப்பாணம் | கணக்குகள் |
| சிறிசேன, ரி. கே. எஸ். | பெரியாசுப்பத்திரி, கொழும்பு | கணக்குகள் |
| விக்கிரமசேகர, ஏ. | பெரியாசுப்பத்திரி, காலி | கணக்குகள் |
| வீரசிங்ஹ, எஸ். | அரசாங்க ஆசுப்பத்திரி, மாத்தளை | சிங்களம் அ, ஆ |

சுகாதாரசேவை அதிபதி அலுவலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆடி ஜூலை மீ 21 ந உ.

டி. டி. விதானச்சி,
பதில் பிரதி அதிபதி (நிருவாகம்),
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

7-1163—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,917

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை அரசாங்க விமானப் படை

இலங்கை அரச விமானப் படையின் கொழும்பிலுள்ள தலைமை நிலைய வளவில் ஒரு அரச மரத்தைத் தறித்து அப்புறப்படுத்தக் கேள்விகள், கொழும்பு த. பெ. எண் 594 ஐக் கொண்ட அரச விமானப் படைத் தலைமை நிலையத்திலுள்ள கேள்விச் சபைத் தலைவரால் 14.8.70 வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள இலங்கை விமானப் படை தலைமைக் காரியாலயத்திலிருக்கும் பிரதான வேலை உத்தியோகத்தரிடமிருந்து இதுபற்றிய விபரங்களையும் பெற்றுக் கொள்வதோடு, அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விப்படிவங்கள் 13. 8. 70 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும். எல்லாக் கேள்விகளும் இரு பிரதிகளாகக் கையொப்பமிட்டு உறைகளிலிட்டு மெழுகிட்டு அவ்வுறையின் இடதுபுற மேல்மூலையில் இலங்கை அரச விமானப் படையின் கொழும்பிலுள்ள தலைமை நிலைய வளவில் ஒரு அரச மரத்தைத் தறித்து அப்புறப்படுத்தக் கேள்வி எனக் குறிப்பிட்டு கேள்விச் சபைத் தலைவர், இலங்கை அரச விமானப் படைத் தலைமை நிலையம், த. பெ. எண் 594, கொழும்பு என முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும்.

3. திருப்பிப் பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணமான 10 ரூபாவையும் திருப்பி பெறமுடியாத கேள்விப் பணமான 1 ரூபாவையும் கட்டியதற்கான பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள இலங்கை அரச விமானப் படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கேள்விக் கட்டுப்பணத்தையும், கேள்விப் பணத்தையும் கட்டி அதற்கான பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

எம். எஸ். மாறுப்,
ஸ்குவாட்றன் லீடர்,
விமானப் படைத் தலைவருக்காக.

7–1161—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## காணி அபிவிருத்தி இலாகா

1970/71 நிதிவருடத்தில் முதலாவது/இரண்டாவது பாதியில் திருகோணமலை பெரும் பகுதியில் இருக்கும் காணி அபிவிருத்தி அதிகாரியின் கீழ் கூறப்படும் திட்டங்கட்கு கட்டிட சாமான்கள் விநியோகிப்பதற்காக கேள்விப்பத்திர அறிவித்தல்கள்.

2. திருகோணமலை காணி அபிவிருத்தி அதிகாரியால் அல்லை, வான்அலை, மொறவேவ, கந்தளாய், திருகோணமலைப் பட்டணம், வேப்பங்குளம், மங்களவேவ ஆகிய கட்டிடத் தாபனங்கட்கு கட்டிட சாமான்கள் விநியோகிப்பதற்கு கேள்விப் பத்திரங்கள்.

(1) கருங்கல் 6" 9"—பருமனுள்ள கிப்பு
(2) உடைத்தகல்—கிப்பு வீதம் 4"
(3) உடைத்தகல்—கிப்பு வீதம் 2"
(4) உடைத்தகல்—கிப்பு வீதம் 1½"
(5) உடைத்தகல்—கிப்பு வீதம் 1"
(6) உடைத்தகல்—கிப்பு வீதம் ¾"
(7) உடைத்தகல்—கிப்பு வீதம் ½"
(8) செங்கல் (4½" × 2¾" × 8½") அளவுடைய 1,000 வீதம்
(9) ஆற்றுமணல் கிப்பு வீதம்
(10) சுட்ட சுண்ணும்பு—புசல் வீதம்
(11) பச்சைச் சுண்ணும்பு—புசல் வீதம்
(12) ஓடு (7 அடிக்குக் குறையாத நீளமும் 18 அங்குலத்திற்கு குறையாத அகலமும் கொண்ட 1,000 சோடிகள் வீதம்).

3. கீழ்க்காணும் விநியோக முறைகட்கு வெவ்வேறு விகிதங்கள் குறிக்கப்படவேண்டும் :—

(அ) தோட்டத்தில் இருந்து.

(ஆ) போறணையில் இருந்து (போறணையும், சூளையும் 10 மைல் சுற்றுடலில் இருப்பின்).

4. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப்பணமாக ஒவ்வொரு திட்டத்திற்கும் இவ்வலுவலகத்தில் அல்லது வேறு ஏதாவது கச்சேரியில் கட்டிய பற்றுச்சீட்டு கொடுக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஆவணி மாதம் 17 ந் திகதி மு. ப. 11.00 மணிவரை வழங்கப்படும்.

5. எல்லாக் கேள்விக்காரர்களும் தங்கள் பெயர், விலாசம் என்பனவற்றை தெளிவாக எழுதவேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் வெவ்வேறு இணைப்பிரதிகள் புறம்பாக அனுப்புதல் வேண்டும். அவை பின்வருமாறு குறிப்பிடவேண்டும். "காணி அபிவிருத்திப் பகுதி, திருகோணமலை பிரிவிற்கான கட்டிட சாமான்களுக்கான கேள்விப்பத்திரம்". இவற்றைப் பதிவுத் தபால் மூலம் காணி அபிவிருத்தி அதிகாரி, திருகோணமலை என்ற விலாசத்திற்கு அனுப்பலாம். அல்லது இதற்கான இக்கந்தோரில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கலாம்.

**குறிப்பு.**—மேற்படி கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஆவணி. மாதம் 18 ம் திகதிக்கு முன்பதாக சேர்க்கப்படல் வேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் குறிக்கப்பட்ட தொகைப் பொருட்களை குறிக்கப்பட்ட காலவெல்லைக்குள் காலத்திற்குக் காலம் இரண்டு வாரத் தவணை அறிவித்தலில் பொருட்களை விநியோகிப்பதற்கு அன்றேல் கொண்டு பங்கீடு செய்வதற்கு என்னுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். கேள்விக்காரர்கள் யாரேனும் இவ்வண்ணம் விநியோகம் செய்ய மறுத்தால் அல்லது தவறினல் அவர் தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கேள்விக்குரிய கட்டுப்பணத்தையும் இழக்க நேரிடும்.

7. கேள்விக்காரர் விரும்பினுல் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் அதாவது 1970 ம் ஆண்டு ஆவணி மாதம் 18 ந் திகதி காலை 11.00 மணிக்கு சமூகமளிக்கலாம்.

8. திருகோணமலை காணி அபிவிருத்தி அதிகாரி அவர்கட்கு இக் கேள்விப் பத்திரங்களை தள்ளுபடி செய்வதற்கோ அல்லது ஏற்கவோ அல்லது சிலவற்றை மாத்திரம், அல்லது எல்லாவற்றையும் ஏற்கவோ தள்ளுபடி செய்யவோ பூரண அதிகாரம் உண்டு.

9. மற்றைய எந்த விபரங்களையும் கீழ் கையொப்பமிட்டிருக்கும் அதிகாரியிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. கனகலிங்கம்,
காணி அபிவிருத்தி அதிகாரி.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
பிரட்ரிக் கோட்டை, திருகோணமலை,
1970 ம் ஞு ஆடி மீ 9 ந வ.

7–1140—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## பொலிஸ் இலாகா

### பழைய பொருட்கள் விற்பனவு

உபயோகிக்க முடியாத பொருட்கள் 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு வட மத்திய பகுதி அனுராதபுர பொலிஸ் சுப்பிறின்ரெண்டனின் பண்டகசாலையில் ஏலத்தில் விற்கப்படும். பணம் உடனே கொடுத்து பொருட்களை உடனே எடுக்கவேண்டும்.

### ஏலத்திற்கு விடப்படும் பொருட்களின் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | மின்சார விசிறி .. .. .. | 2 |
| 2. | மின்சார அடுப்பு .. .. .. | 6 |
| 3. | உயரமான நாற்காலி .. .. .. | 1 |
| 4. | காற்றடிக்கும் பம்பு .. .. .. | 3 |
| 5. | ஸ்திரிக்கைப் பெட்டி .. .. .. | 1 |
| 6. | கரபந்தாட்ட மேலுறை .. .. .. | 13 |
| 7. | கரபந்தாட்ட வலை .. .. .. | 10 |
| 8. | காக்கி மேல் அங்கி .. .. .. | 21 |
| 9. | 4 கலன் வெற்று தகரங்கள் .. .. | 45 |
| 10. | மின் கைவிளக்கு .. .. .. | 10 |
| 11. | மேசை விளக்கு .. .. .. | 1 |
| 12. | கல்வனைஸ் வாளிகள் .. .. .. | 14 |
| 13. | சமக்காளம் .. .. .. | 20 |
| 14. | உடுப்பு பெட்டி .. .. .. | 10 |
| 15. | கால் பட்டிகள் .. .. .. | 24 |
| 16. | மண்ணெண்ணை அடுப்புகள் .. .. | 12 |
| 17. | தும்பு மெத்தைகள் .. .. .. | 55 |
| 18. | நுளம்பு வலைகள் .. .. .. | 53 |
| 19. | மண் வெட்டிகள் .. .. .. | 7 |

| | | |
|---|---|---|
| 20. | மழைக் கோட்டுப் பட்டிகள் | 1 |
| 21. | இறகர் பந்துகள் | 1 |
| 22. | கறுப்பு மழைக் கோடு | 8 |
| 23. | மழைக் கோட்டு இறப்பர் | 8 |
| 24. | இரும்புச் சுரண்டிகள் | 2 |
| 25. | சுவர் விருக்கைகள் | 9 |
| 36. | கரம் போட் | 3 |
| 27. | துவிச்சக்கர வண்டி | 4 |
| 28. | சாதாரண நாற்காலிகள் | 16 |
| 29. | கால் சப்பாத்துக்கள் | 5 |
| 20. | வெற்று பீப்பாக்கள் | 3 |
| 31. | சீலை துடைப்பங்கள் | 14 |
| 32. | (பொல்லுகள்) குண்டாந்தடிகள் | 6 |
| 33. | மேல் அங்கி | 8 |
| 34. | சாரதிகள் தொப்பி | 4 |
| 35. | தோல் பூட்ஸ்சுக்கள் | 40 |
| 36. | இருப்புப்பட்டிகள் சார்ஜன்—பொலிஸ் | 15 |
| 37. | குண்டுப் பை | 15 |
| 38. | இரும்புத் தொப்பி | 2 |
| 39. | கால்பந்து மேலுறை | 1 |
| 40. | இலாந்தர்கள் | 6 |
| 41. | துவிச்சக்கர வண்டிக் கரியர் | 1 |
| 42. | தொப்பிகள் | 75 |
| 43. | காக்கி அரைகாற்சட்டை | 32 |
| 44. | தோல் சப்பாத்துக்கள் சாதாரண | 155 |
| 45. | கால் மேசுகள் | 16 |

**அரசாங்க பொருட் பதிவேடு**

ஏலத்திற்கு விடப்படும் பொருட்களின் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | சப்பாத்து பொலிஸ் பரிசோதகர், உபபொலிஸ் பரிசோதகர் | 1 |
| 2. | தொப்பிகள், பொலிஸ் பரிசோதகர், உபபரிசோதகர்களுக்கு | 6 |
| 3. | தோல் கனத்த சப்பாத்துக்கள் சார்ஜன், பொலிஸ் | 1 |
| 4. | காக்கி நீளக் காற்சட்டை பரிசோதகர், உபபரிசோதகர் | 1 |
| 5. | தோல் சப்பாத்து சார்ஜன், பொலிஸ் | 6 |
| 6. | கால்மேசுச் சோடிகள் | 8 |
| 7. | காக்கி அரைகாற் சட்டைகள் | 1 |
| 8. | காக்கி மேல் அங்கிகள் | 2 |
| 9. | காக்கி, புஸ் கோட்டுக்கள் | 7 |

**திணைக்கள பொருட் பதிவேடு**

ஏலத்திற்கு விடப்படும் பொருட்களின் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | கரம் போட்டுக்கள் | 1 |

எஸ். ஜி. டி சீ. எல். எஸ். கேறத்,
பொலிஸ் சுப்பிறின்ரெண்டன்,
வட மத்திய பகுதி.

அநுராதபுரம்,
20.7.70.

7–1124—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் தேதி புதன்கிழமை மு. ப. 10 மணிவரை, பின்வரும் வேலைக்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

(1) ஜா-எலை டிப்போவில் வீதிகளையும் கால்களையும் பாவுதல்.

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப் படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசிலனை செய்யலாம். ரூபா 35,000 தொகைக்குக் குறையாத சிவில் பொறியியல் வேலைகளுக்காக இ. போ. ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100 க்கான கேள்விப்பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் கேள்விப்பத்திரச் சாதனங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாத கட்டணமாக ரூபா 25 க்கான பற்றுச்சீட்டையும் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதி வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன்பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப் பட்டபின், கேள்விப்பத்திரக் கட்டுப் பணத்தைக் காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

7–1195—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் திணைக்களம்

### தபால் ஏற்றிச் செல்லலுக்கான கேள்விப்பத்திரம்

1970 ஒக்ரோபர் 1 ம் திகதி தொடக்கம் நான்கு வருட காலத்துக்கு புங்குடுதீவு (கழுதைப்பிட்டி)—நயினாதீவுத் துறைமுகங்களுக்கிடையில், தபாற்களை மோட்டார் படகுகளில் ஏற்றிச் செல்லலுக்கான ஒரு ஒப்பந்தத்தைச் செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை, 1970 ஒகத்து 20 ம் திகதி மு. ப. 10 மணிவரை, கொழும்பு 1, அஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவலகம், அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் திணைக்களக் கேள்விச்சபைச் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்.

அஞ்சல் அதிபர் நாயகத்துக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொண்ட படிவங்களில் கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் வேண்டும். அஞ்சல் அதிபர் நாயகத்திடமிருந்து இவ்விடயம் சார்பாக சகல விவரங்களையும் அறிந்து கொள்ளலாம். அஞ்சல் அலுவலகத்தில் அல்லது கல்சேரியில் ரூபா 10 க் கட்டுப் பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப் பத்திரப் படிவம் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் படிவங்கள் 1970 ஒகத்து 12 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வழங்கப் படும்.

வி. எம். அபேசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்தித்தொலை
செய்திப் போக்குவரத்து அதிபரும்.

அஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவலகம்,
கொழும்பு 1.

7-1183—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும்பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையில் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் புகையிரத நிலையங்களிலிருந்து/சுகாதார அலுவலகத்திலிருந்து பால் ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து அநுராதபுரம் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ii) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணம் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றை கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடைந்த திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியிற் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகுதிகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்ப வேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதாரசேவை அத்தியட்சகர், அநுராதபுரம் என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் கீழ்மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது என் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் விகிதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக் கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் அநுராதபுரப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எச். சீ. ஹுருகொட,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
அநுராதபுரம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
அநுராதபுரம்,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 21 ந் உ.

### மேற்கூறப்பட்ட அட்டவணை

| சேவை | | பிரிவு | | மாதாந்த உத்தேசத் தொகை பயின்ற் | கேள்வி மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| (1) அநுராதபுர புகையிரத நிலையத்திலிருந்து அநுராதபுரம் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் ஊடாக அவ்வதிகாரியின் பகுதியில் உள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு | .. | அநுராதபுரம் | .. | 6,000 | 21.8.70 காலை 10 மணி |
| (2) திருகோணமலை புகையிரத நிலையத்திலிருந்து திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் ஊடாக அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு | .. | திருகோணமலை | .. | 6,500 | |
| (3) கெக்கிராவை புகையிரத நிலையத்திலிருந்து கெக்கிராவை பொறுப்புள்ள அதிகாரியின் அலுவலகம் ஊடாக அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு | .. | கெக்கிராவை | .. | 3,550 | |

7–1156/1—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பால் மாவும் சீனியும் விநியோகித்தல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி முடியவுள்ள காலம் வரைக்கும், கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளின் பொறுப்புள்ள அதிகாரிகளின் காரியாலயங்கள், களஞ்சியத் திடுகைகளின் ஊடாக புகையிரத நிலையங்களிலிருந்துபால்மாவும், ஐக்கிய பண்டகசாலை களிலிருந்து சீனியும் பால் ஊட்டப்படும் நிலையங்கட்கு விநியோகிப்பதற்கு உரியதும் வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில்- நிலையங்களிடமிருந்து அனுராதபுரப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப்பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(ii) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள், அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணம் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அன்றி அவர்கள் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் பந்தியில் விநியோகிக்கப்பட வேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், அனுராதபுரம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல்மூலையில் சேவையின் தன்மையும் கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்து பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர்கள் சமூகமாய் இருக்கலாம். சமூகமாய் இருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் முதலாம் பந்தியில் சொல்லியிருப்பது போல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளை படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கு இணங்க நடக்க வேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் அனுராதபுரப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
அனுராதபுரம்,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 21 ந் டெ.

எச். ஸீ. யூருகொட,
சுகாதார சேவை அத்தியட்சகர்
அனுராதபுரம்.

### மேல் கூறப்பட்ட அட்டவணை

| 1 | 2 | 3 | | 4 |
|---|---|---|---|---|
| | | உத்தேசத் தொகை | | மூடப்படும் கேள்வித் திகதியும் நேரமும் |
| சேவை | பிரிவு | பால்மாவு அந்தர் | சீனி அந்தர் | |
| (1) திருகோணமலை சுகாதார அதிகாரியின் அலுவலகத்திற்கும் அவ் அதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் திருகோணமலை புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும் திருகோணமலை ஐக்கிய பண்டசாலையிலிருந்து சீனியும் .. .. .. .. | திருகோணமலை .. | 50 .. | 16 | 21.8.70 காலை 10 மணி |
| (2) அனுராதபுரம் சுகாதார அதிகாரியின் அலுவலகத்திற்கும் அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் அனுராதபுரம் புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும் அனுராதபுரம் ஐக்கிய பண்டசாலையிலிருந்து சீனியும் .. .. .. .. | அனுராதபுரம் .. | 36 .. | 13 | |
| (3) கெக்கிருவ சுகாதார பொறுப்பு உத்தியோகத்தரின் அலுவலகத்திற்கும் அவ்வுத்தியோகத்தரின் பகுதியிலுள்ள பாலூட்டும் நிலையங்களுக்கும் கெக்கிருவ புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும் கெக்கிருவ ஐக்கிய பண்டசாலையிலிருந்து சீனியும் .. .. .. .. | கெக்கிருவ .. | 30 .. | 11 | |
| (4) காட்டகஸ்திலிய சுகாதார பொறுப்பு உத்தியோகத்தரின் அலுவலகத்திற்கும் அவ்வுத்தியோகத்தரின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் அனுராதபுரம் புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும் காட்டகஸ்திலிய ஐக்கிய பண்டசாலையிலிருந்து சீனியும் | காட்டகஸ்திலிய .. | 10 .. | 3 | |

7-1156/2—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## சுகாதார திணைக்களம்—அனுராதபுரப் பிரிவு

### அழுக்குத்துணி சலவை செய்தல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ம் திகதி (இருநாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் முதலாம் பந்தியிலுள்ள தாபனங்களுக்கு அழுக்குத்துணி சலவை செய்வதற்கான முத்திரை பொறிக்கப்பட்ட வெவ்வேறு கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழிற் தாபனங்களிடமிருந்து அநுராதபுரம் சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக்கட்டுப் பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 2 வது பந்தியில் குறிக்கப்படும் வைப்புப்பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

(ii) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன்பாக இவ் வலுவலகத்திலும் ; அல்லது

| | | | | |
|---|---|---|---|---|
| பதுளை | காலி | கேகாலை | மாத்தறை | வவுனியா |
| மட்டக்களப்பு | களுத்துறை | குருநாகல் | புத்தளம் | யாழ்ப்பாணம் |
| கொழும்பு | கண்டி | மாத்தளை | இரத்தினபுரி | |

ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சர் அலுவலகங்களிலும் கொடுக்கப்படும். குறித்த பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களைத் தபால் மூலம் பெறுதற்கு, தகுதியுள்ள கேள்விக்காரர்கள், கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிப்பதற்கு ஏற்றதாக நேரகாலத்தோடு விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **சலவை செய்யவேண்டிய துண்டுகளின் விபரங்கள்.**—மாதாந்தம் சலவை செய்யவேண்டிய துண்டுகளின் உத்தேச தொகை விபரங்கள் கீழ்க்காணும் அட்டவணையின் 5 ம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்வியும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், அநுராதபுரம் என்று முகவரியிட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக்கொண்ட உறையின் இடதுபக்கத்தின் மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்த அலுவலகத்திலிருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ அல்லது செயலாளர்/கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 6 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதி காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியை நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணை வைப்புப்பணம்.**—கேள்விகள் ஒப்புக்கொள்ளப்பட்டதிலிருந்து 10 நாட்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் தரப்பட்டிருக்கும் பிணைவைப்புப் பணத்தை செலுத்திய பின்னர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. வேறு விபரங்கள்—(i) **களஞ்சிய அறை மின்சாரம், நீர், ஏனைய வசதிகள்.**—களஞ்சிய அறை, மின்சாரம், நீர், ஏனைய வசதிகள் பெறப்படின் அச்சலுகைகளுக்கான செலவை அவ்வூர் பெரும்பாக இறைவரி அதிகாரியினால் கணிக்கப்பட்ட விகிதப்படி மாதாந்தம் ஒப்பந்தக்காரரின் மாதாந்த உறுதிச்சீட்டிலிருந்து அறவிடப்படும்.

(ii) **அழுக்குத்துணிகளை கிருமிநாசினி செய்யவேண்டின் அதற்கான போக்குவரத்துக் கட்டணம்.**—அழுக்குத்துணிகளை சலவை செய்யுமுன் கிருமிநாசினி செய்யவேண்டி நேரிடின் தாபனங்களிலிருந்து கிருமிநாசினி நிலையத்திற்கு எடுத்துக்கொண்டு திரும்பக் கொண்டுவருவதற்கான போக்குவரத்துக் கட்டணம் கொடுபடமாட்டா.

(iii) **உள்ளூராட்சி பகுதியிலுள்ள நிலையங்களுக்கான கேள்விப்பத்திரங்கள்.**—உள்ளூராட்சி நிலையங்களுக்கான கேள்விகளை அவ்வுள்ளூராட்சி விதிகளுக்கு—ஏதும் உண்டானால்—அமையச் சலவைச்சாலைகள் நடத்துபவர்களே விண்ணப்பிக்கலாம்.

(iv) கேள்விக்காரர்கள் விரும்பினால் ஒரு பகுதிக்கு அல்லது எல்லாப் பகுதிகளுக்கும் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் குறிக்கப்பட்ட தொகையைக் கட்டுப்பணமாக கேள்விப்பத்திரம் அனுப்பும் ஒவ்வொரு பகுதிக்கும் செலுத்தவேண்டும்.

எச். சீ. ஹேருகொட,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
அநுராதபுரம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம், அநுராதபுரம்,
1970 ம் ஆண்டு யூலை மீ 21 ந உ.

### குறித்த அட்டவணை

| (1) தாபனம் | (2) கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா | (3) பிணை வைப்புப் பணம் ரூபா | (4) மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய தடவைகள் சராசரித்தொகை | (5) மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய துணிகளின் உத்தேச தொகை | (6) கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| **அரசினர் வைத்தியசாலை, அநுராதபுரம்** | | | | | |
| பிரிவு 1. சத்திர சிகிச்சை மண்டபம், குழந்தைகள் சிகிச்சை, கர்ப்பச் சிகிச்சை, ஆண், பெண் சத்திர சிகிச்சைக் களங்கள் | 100 | 300 | 30 | 8,200 | 21.8.70 காலை 10 மணி |
| பிரிவு 2. பொதுச் சிகிச்சைக் களங்கள் | 50 | 200 | 4 | 5,000 | |
| பிரிவு 3. க்ஷயரோக சிகிச்சைக் களங்கள் | 25 | 100 | 4 | 500 | |
| பிரிவு 4. தாதிமார் பயிற்சிப் பாடசாலை | 25 | 100 | 3 | 100 | |
| **அரசினர் வைத்தியசாலை, திருகோணமலை** | | | | | |
| பிரிவு 1. சத்திர சிகிச்சை மண்டபம், குழந்தைகள் சிகிச்சை, கர்ப்பச் சிகிச்சை, ஆண், பெண் சத்திர சிகிச்சைக் களங்கள் | 100 | 300 | 30 | 5,000 | |
| பிரிவு 2. பொதுச் சிகிச்சைக் களங்கள் | 50 | 200 | 4 | 1,000 | |
| பிரிவு 3. க்ஷயரோக சிகிச்சைக் களங்கள் | 25 | 100 | 4 | 300 | |

## பொலிஸ் திணைக்களம்

கீழ்க்காணு இடங்களில், சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென மறித்து வைக்கப்பட்டிருப்போருக்கு 1. 10. 1970 தொடக்கம் 30. 9. 1971 வரையும் சமையல் செய்த உணவு வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமைக் காரியாலய கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும் :—

(அ) கொம்பனித் தெருவிலுள்ள பொலிஸ் தடுப்புக்காவல் நிலையம்.

(ஆ) தலைமன்னாரிலுள்ள பொலிஸ் தடுப்புக்காவல் நிலையமும், தொற்று நோய் பரவாத்தடை நிலையமும்.

2. கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் அலுவலகங்களில் முறையே பெற்றுக் கொள்ளலாம்.

(அ) பொலிஸ் அதிகாரி, எச்சலன் சதுக்கம், கொழும்பு-1.

(ஆ) பொலிஸ் அதிகாரி, வடபகுதி, யாழ்ப்பாணம்.

கேள்விக்கட்டணமாக ரூபா 25/- மேற்கூறிய பொலிஸ் அதிகாரிகளின் அலுவலகங்களில் அல்லது கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் வெளியேயுள்ள ஏதாவது ஒரு கச்சேரியில் செலுத்திய பற்றுச்சீட்டைக்காட்டி, 1970 ம் ஆண்டு ஆவணி மாதம் 18 ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரையும் கேள்விப் பத்திரப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் (இரண்டு பிரதிகளாக) இவ்விரு காரியாலயங்களில் பெற்ற கேள்விப் பத்திரப்படிவங்களில் 1970 ம் ஆண்டு ஆவணி மாதம் புதன்கிழமை 19 ம் திகதி முற்பகல் 10.00 மணிக்குமுன் கொழும்பில் உள்ள பொலிஸ் அதிபரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரச் சபைத் தலைவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்கள் இப்பந்தியிற் கூறப்பட்ட நேரத்திற்கும் திகதிக்கும் முன் அக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்கள் இப்பந்தியிற் கூறப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் முன் பொலிஸ் தலைமைக்காரியாலய அதிகாரியிடம் கொடுத்து, அவரிடம் பெற்றுக்கொண்டமை ஒப்புக்கொள்ளும் கடிதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. 1970 ம் ஆண்டு ஆவணி மாதம் 19 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை மேற்கூறப்பட்ட திணைக்களத்தில் திறக்கும் பொழுது கேள்வியாளர்கள் பிரசன்னமாய் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

5. மேலதிக விபரங்களைக் கொழும்பு பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்திலிருந்தும், யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரியினது அலுவலகத்திலிருந்தும் முறையே பெற்றுக்கொள்ளலாம்.

பொலிஸ் அதிபர்.

பொலிஸ் தலைமைக்காரியாலயம்,
கொழும்பு-1 1970. 7. 22.

7-1128—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### கொச்சிக்கடை நிலக்கரி நிலைய 1 ஆம் இலக்கத் தேனீர்க் கடை

மேற்கூறிய கொச்சிக்கடை நிலக்கரி நிலைய 1 ஆம் இலக்கத் தேனீர்க் கடையைக் குத்தகையில் கொடுப்பதற்கெனப் பொறிவிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1970 8. 14 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை கப்பற்றுறை ஆணையாளர் ஏற்றுக் கொள்வார் இக் குத்தகையின் காலம் கப்பற்றுறை ஆணையாளர் நிட்சயிக்கும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்காகும்.

2. அவருடைய அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவங்களில், இணைப் பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் ரூபா 25/- கட்டுப் பணமாகச் செலுத்தப்பட்ட பின்னர்தான் இப் படிவங்கள வழங்கப்படும்.

3. 1970.8.12 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லா வேலை நாட்களிலும் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

4. குத்தகை சம்பந்தமான நிபந்தனைகள் கேள்விப் பத்திரப் படிவங்களுடன் கொடுக்கப்படும்.

7-1139—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### கிறேவிங் டொக் தேனீர்க் கடை

மேற்கூறிய கிறேவிங் டொக் தேனீர்க் கடையை குத்தகையில் கொடுப்பதற்கெனப் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1970. 8. 14 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை கப்பற்றுறை ஆணையாளர் ஏற்றுக் கொள்வார். இக்குத்தகையின் காலம் கப்பற்றுறை ஆணையாளர் நிட்சயிக்கும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்காகும்.

2. அவருடைய அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவங்களில், இணைப் பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் ரூபா 25/- கட்டுப் பணமாகச் செலுத்தப்பட்ட பின்னர்தான் இப்படிவங்கள் வழங்கப்படும்.

3. 1970.8.12 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லா வேலை நாட்களிலும் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

4. குத்தகை சம்பந்தமான நிபந்தனைகள் கேள்விப் பத்திரப் படிவங்களுடன் கொடுக்கப்படும்.

7-1140—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## தபால் தந்திப் பகுதி

### பீக் தொப்பி விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள்

நாராஹேன்பிட்ட, உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலுள்ள மாதிரி பீக் தொப்பியைப் போல் பீக் தொப்பிகள் விநியோகிப்பதற்கு கேள்விப் பத்திரங்கள், கொழும்பு, தபால் தந்திப் போக்குவரத்து தலைமைக் கட்டடத்திலுள்ள பெரும்பாகக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1970 ஆகஸ்ட் மாதம் 17 ம் திகதி மு. ப. 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்ளிப் பத்திரங்கள், 1970 ஆகஸ்ட் மாதம் 17 ம் திகதி மு. ப. 10 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப் படும்போது கேள்விப் பத்திரதாரர் சமுகமளிக்க அனுமதிக்கப் படுவர்.

3. கொழும்பு நாராஹேன்பிட்டயிலுள்ள தபால் தந்திப் போக்குவரத்து பகுதியின் உபகரணம், கட்டம், நலன்புரி, களஞ்சியம் ஆகியவை சம்பந்தமான உதவி அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திர சாதனங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விபரங்களும் அவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கொழும்பு பிரதம அஞ்சல் அலுவலகத்தில் 4 ம் இலக்க கருமபீடத்தில் கேள்விப்பத்திர பொறுப்புப்பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர சாதனங்கள் விநியோகிக்கப்படும். கேள்விப்பத்திர சாதனங்கள் 1970 ஜூலை மாதம் 31 ம் திகதி தொடக்கம் 1970 ஆகஸ்ட் மாதம் 14 ம் திகதி வரை பி. ப. 4.30 மணி வரை விநியோகிக்கப்படும்.

எம். பீ த சில்வா,
உதவி அஞ்சல் அதிபர் நாயகம் (தபால் சேவை)

தபால் பிரிவு,
தபால் தந்தி தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

7-1177/1—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

### அஞ்சல் தந்தித் திணைக்களம்

கொழும்பு 1, அஞ்சல் தந்தித் தலைமை அலுவலகத்தின் மேலதிக மாவட்டக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால், 1970 ஓகத்து 17 ம் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.00 மணிவரை கீழ் கூறப்படும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) நாவலப்பிட்டியில் உதவியாளர்கள் குடிமனைகளை அமைப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தைச் சுற்றி முள்ளுக் கம்பி அடித்தல்.

(2) அக்கரப்பத்தனையில் புதிய உப அஞ்சல் அலுவலகக்கட்டிடம் அமைப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தைச் சுற்றி முள்ளுக் கம்பி அடித்தல்.

(3) கொத்மலையில் உள்ள கீழ்ப்பணியாளர் குடிமனைகளை பராமரித்தலும் பழுது பார்த்தலும்.

(4) நுவரெலி அஞ்சல் அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களது மலகூடத்தின் கூரை திருத்துதல், பராமரித்தல், பழுதுபார்த்தல்.

(5) கந்தப்பொலையில் மூன்று மலகூடங்களை வாட்டர்சீல் முறைக்கு மாற்றி அமைத்தல்.

(6) கண்டி அஞ்சல் அலுவலகக் கட்டிடத்திற்கு வெள்ளை அடித்தலும் பராமரித்தலும் பழுது பார்த்தலும்.

(7) புசலாவை அஞ்சல் அலுவலகத்திற்கு வெள்ளை அடித்தலும், பராமரித்தலும், பழுதுபார்த்தலும்.

(8) கம்பளை அஞ்சல் அலுவலகத்திற்கு வெள்ளை அடித்தலும், பராமரித்தலும், பழுதுபார்த்தலும்.

(9) கட்டன் (தொப்பித்தோட்டம்) அஞ்சல் அலுவலகத்திற்கு வெள்ளை அடித்தலும், பராமரித்தலும், பழுதுபார்த்தலும்.

(2) அஞ்சல் தந்தித் திணைக்களத்தில் அல்லது அரசாங்கக் கட்டு வேலைப் பகுதி அல்லது ஏதாவது அரசாங்க அமைப்புத் திணைக்களத்தில் கட்டிட வேலைகளுக்கெனப் பதிவு செய்யப்பட்டவர்களுக்கும் ரூபா 10,000/- க்கும் அதற்கு மேலும் கட்டிடங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கும் மட்டுமே கண்டி (மத்தி) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சர் அலுவலகத்தில் 1970 யூலை 12 ம் திகதி பி. ப. 2.00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். மேற்குறிப்பிட்டவாறு கட்டிட வேலைகளுக்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட களகங்களும் இவ்வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படு முன்னர், கண்டி (மத்தி) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரினது திருப்திக்காக பதிவு ருசுப்படுத்தப்படல் வேண்டும். களகங்கள் கேள்விப் பத்திர வைப்புப்பணத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

(3) மேற்கூறப்பட்ட ஒவ்வொரு விடயங்களின் சார்பாக வைப்புப்பணமாக ரூபா 25/- கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். இத்தீவிலுள்ள எந்த அஞ்சல் அலுவலகத்திலும் கேள்விப்பத்திர வைப்புப் பணம் கட்டலாம்.

(4) கொழும்பு 1, அஞ்சல் தந்தித் தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள மேலதிக மாவட்டக் கேள்விப்பத்திரச் சபைத்தலைவரினது அலுவலகத்தில் 1970 ஓகத்து 17 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப்பத்திரகாரர் சமூகமளிக்க அனுமதி வழங்கப்படும். மேலதிக விபரங்கள் கண்டி (மத்தி) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும், தந்திப் போக்குவரத்து அதிபரும்.

அ. த. தலைமை அலுவலகம்,
கொழும்பு.

7–1177/2—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு
### பேரையாற்றுத் தொழில் நுட்ப அபிவிருத்திப் பகுதி
### உணவு விற்பனவுச்சாலை

மேற்கூறிய பேரையாற்றுத் தொழில்நுட்ப அபிவிருத்திப் பகுதி உணவு விற்பனவுச்சாலை குத்தகையில் கொடுப்பதற்கெனப் பொறிபிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1970.8.14 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை கப்பற்றுறை ஆணையாளர் ஏற்றுக் கொள்வார். இக்குத்தகையின் காலம் கப்பற்றுறை ஆணையாளர் திட்சயிக்கும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்காகும்.

2. அவருடைய அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவங்களில், இணைப் பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் ரூபா 25/- கட்டுப் பணமாகச் செலுத்தப்பட்ட பின்னர்தான் இப் படிவங்கள் வழங்கப்படும்.

3. 1970. 8. 12 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லா வேலை நாட்களிலும் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

4. குத்தகை சம்பந்தமான நிபந்தனைகள் கேள்விப் பத்திரப் படிவங்களுடன் கொடுக்கப்படும்.

7-1131—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

### மதுவரித் திணைக்களம்
### சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச் செல்வதற்குக் கேள்விப் பத்திரங்கள்
### 1970/1971

1970 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1971 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ஆம் திகதி வரையுமுள்ள ஒரு வருட காலத்திற்கு யாழ்ப்பாணம் மதுவரிக் குதத்திற்கும் புகையிரத பண்டகசாலைக்குமிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச் செல்வதற்கு மதுவரித் திணைக்களம், 1 ஆம் மாடி, ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1 திலுள்ள கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1970 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24 ஆம் திகதி பிற்பகல் 11.00 மணி வரைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. மதுவரி ஆணையாளரிடமிருந்து விண்ணப்பித்துப் பெறப்படும் கேள்விப் பத்திரங்களிலேயே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விடயத்தையிட்ட சகல விபரங்களையும் மதுவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். 1970 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணிக்குப் பின் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

எம். பி. திசாநாயக்க,
மதுவரி ஆணையாளர்.

மதுவரி ஆணையாளரின் திணைக்களம்,
1 ஆம் மாடி, ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஆடி மீ 16 ந் உ.
எல்பி/ரி/437.

7-1166—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

### மதுவரிப் பகுதி
### வவுனியாவிலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரதப் பகுதிப் பண்டகசாலைக்கு மிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச் செல்வதற்கு கேள்விப்பத்திரங்கள்
### 1970/1971

1970 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1971 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ஆம் திகதி வரைக்குமுள்ள காலத்திற்கு வவுனியாவிலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரதப் பண்டகசாலைக்குமிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச் செல்வதற்குரிய கேள்விப் பத்திரங்களை 1970 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24 ஆம் திகதி முற்பகல் 11.00 மணி வரை யாழ்ப்பாணம் வடபகுதி உதவி மதுவரி ஆணையாளர் ஏற்றுக்கொள்வார்.

2. ஓர் கச்சேரியில் இதற்கென ரூபா 10/- செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக்காட்டி மேற்படி உதவி மதுவரி ஆணையாளரிடம் பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களையே விண்ணப்பிக்க வேண்டும். 1970 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணிக்குப் பின் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

3. இவ்விடயம்பற்றிய வேறு விபரங்களைக் குறித்த உதவி மதுவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். பி. திசாநாயக்க,
மதுவரி ஆணையாளர்

மதுவரி ஆணையாளரின் திணைக்களம்,
1 ஆம் மாடி, ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஆடி மீ 16 ந் உ.
எல்பி/ரி/437.

7-1165—31.7.70 திகதிய வர்த்தமானி இல. 14,917

## தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

### இரண்டு பழைய தட்டச்சுக்கள், பாவிக்கப்பட்ட 8 ரயர்கள் (ரியூப்புக்களுடன்) 1½ அந்தர் பழைய பத்திரிகைகள் கொள்வனவுக்கான கேள்விகள்

கொழும்பு 7, அல்பேர்ட் கிரசன்ற் இல. 16 ல் உள்ள தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களக் கிளை அலுவலக வளவிலிருந்து பின்வருவனவற்றை கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான கேள்விகள் 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ம் திகதி பிற்பகல் 3.00 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

விபரங்கள்

1. தட்டச்சு (ஆங்கிலம் அண்டர்வூட்) இல. எஸ் 5834068
2. தட்டச்சு (ஆங்கிலம் அண்டர்வூட்) இல. இல்லை.
3. வான் ரயர்கள் ரியூப்புக்களுடன். (600 × 16)—4.
4. ஜீப் ரயர்கள் ரியூப்புக்களுடன் (600 × 16)—4.
5. பழைய பத்திரிகைகள் 1½ அந்தர்.

வழமையான அலுவலக நேரங்களில் கொழும்பு 7, அல்பேர்ட் கிறசென்ற் இல. 16 ல் உள்ள தொகை மதிப்புப் புள்ளிவிபர திணைக்கள கிளை அலுவலகத்தில் இவைகளைப் பார்வையிடலாம்.

மீண்டும் பெறத்தக்க வைப்புப் பணம் ரூபா 5 ஐ செலுத்துபவருக்கு கொழும்பு தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள நிறுவன நிர்வாக உதவியாளரால் கேள்விப் படிவங்கள் 26.8.70 திகதி முற்பகல் 10 மணி வரையும் வழங்கப்படும்.

கொழும்பு 7, அல்பார்ட் கிறசென்ற் இல. 16 ல் உள்ள தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள அலுவலகத்தில் இருந்து இக்கேள்விகள் சம்பந்தமான மேற்படி எல்லா விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

எல். பி. ராஜகருணா,
தொகை மதிப்புப் புள்ளிவிபர அதிபர்.

7–1116—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## விவசாயத் திணைக்களம்

### *புத்தளம் மாவட்ட விவசாய அலுவலகத்தில் காராஜ் ஒன்றும் கக்கூசு ஒன்றும் அமைப்பதற்கான கேள்விப்பத்திரம்*

*புத்தளம் மாவட்ட விவசாய அலுவலகத்தில் காராஜ் ஒன்றும் கக்கூசு ஒன்றும் அமைப்பதற்கான கேள்விப் பத்திரம் புத்தளம் மாவட்ட விவசாய அலுவலக மாவட்ட கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1970 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. ஒவ்வொரு விசயத்திற்கும் தனித் தனிக் கேள்விப் பத்திரம இரு பிரதிகளில் தயாரித்து ஒரு உறையில் போட்டு சீல் பண்ணப்பட்டு தலைவர், மாவட்டக் கேள்விப் பத்திரச் சபை, மாவட்ட விவசாய அலுவலகம், புத்தளம் என விலாசம் இட்டு அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பும் உறையின் வலதுபக்க மேல் மூலையில் "புத்தளம் மாவட்ட விவசாய அலுவலகத்தில் காராஜ் ஒன்றும் கக்கூசு ஒன்றும் அமைப்பதற்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். ரூபா 50 தங்குபணமாகச் செலுத்தியதற்குரிய பற்றுச் சீட்டுக் காண்பிப்பதன் பேரில் 1970 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையும் புத்தளம் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரிடமிருந்து கேள்விப் பத்திரப் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்.*

*3. பேராதனை விவசாயத் திணைக்களத்தில் அல்லது எந்தக் கச்சேரியிலும் தங்குபணம் செலுத்தப்படல் வேண்டும்.*

*4. மேலதிக விபரங்கள் புத்தளம் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*ஈ. அபேரத்ன,*
*உதவி விவசாய பணிப்பாளர் (விசாலிப்பு).*

*விவசாயத் திணைக்களம்,*
*பேராதனை, 1970 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆந் திகதி.*

*7-1157—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917*

---

### *யாழ்ப்பாண மாவட்டத்தில் கரைச்சி காரியாதிகாரியின் பிரிவிலுள்ள திருவையாறு படித்த வாலிபர் திட்டத்தில் பிரதான இணைப்பு வீதி அமைத்தல்*

*14,913 இலக்கம் கொண்டதும் 70.7.2 ஆம் திகதி கொண்டதுமான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி வேலைக்கான கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 11.8.70 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளதென்பதைக் கவனிக்கவும்.*

*கே. பொன்னம்பலம்,*
*யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்காக.*

*கரணிக்கிளை,*
*செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*23.7.70.*

*7-1124—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917*

---

## *விவசாய இலாகா*

### *வவுனியா, மாவட்ட விவசாய விஸ்தரிப்பு நிலைய விசாலிப்பும் திருத்தமும்*

*இதற்கான மெழுகு வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரால் 14.8.70 பிற்பகல் 2.30 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*2. வவுனியா மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படும் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். கையெழுத்திட்ட இரண்டு கேள்விப் பத்திரப் பிரதிகளை உறைகளில் இட்டு மெழுகு வைத்து வவுனியா மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர் என முகவரியிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டிட விசாலிப்பும், திருத்தத்திற்குமான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.*

*3. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்கும் ரூபா 10 வைப்புப் பணம் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து, முடிவுத் திகதிக்கு முதல்நாள் 12 மணிக்கிடையில் வவுனியா மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரிடமிருந்து கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர வைப்புப்பணம் எந்தச் செயலகத்திலேனும், அல்லது விவசாய இலாகா, பேராதனையிலேனும் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிப் பெற முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரகாரர் கோரப்படும் பிணைப்பணத்தைக் கட்டத் தவறுமிடத்தும், கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விப்பத்திரகாரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறுமிடத்தும் தனது கேள்விப் பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன், தாமத வேலை செய்யும் ஒப்பந்தகாரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதற்கும் ஆளாவர். அரசாங்கத்திற்கு, அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய வேறு கணக்கு உண்டாயின் அந்த அறவிடுத்தல்களைச் செய்வதற்கு இது தடையாகக் கணிக்கப்படமாட்டாது.*

*4. பதிவுத்தபால் மூலமே கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பத் தவறும் கேள்விப் பத்திரக்காரர் அல்லது பிரதிநிதிகள் தங்களது கேள்விப் பத்திரங்களை மெழுகு வைக்கப்பட்ட உறைகளில் இட்டு உறையின் முற்பகுதியில் "கிணறு தோண்டுவதற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பதுடன் கேள்விப்பத்திரக்காரரின் பெயர் முகவரி முதலியனவும் எழுதப்பட்டு வவுனியா மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்க்க வேண்டும்.*

5. பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்ட கேள்விப்பத்திரம் கிடைத்தற்கான பதில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் தினத தன்று எல்லாக் கேள்விப்பத்திரக்காரர்கட்கும் அனுப்பி வைக்கப் படும். கேள்விப்பத்திரங்கள் கோரும் முடிவு திகதியில் இருந்து நான்கு தினங்களுக்குள் கேள்விப் பத்திரம் பெற்றுக் கொண்டதற் கான பதில் கிடைக்காவிடில் உடனடியாக வவுனியா மாவட்ட விவ சாய விசாலிப்பு உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமளிக்க கேள்விப் பத்திரக்காரர் விரும்பும் பட்சத்தில் அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்கள் கோரும் மேற்குறிப்பிட்ட முடிவு திகதியும் நேரத்திலும் வவுனியா மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத் தரின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் (இருபிரதிக ளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண் ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினுல் தெளிவாக எழுதப்படவேண் டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதலும், பிழை திருத்தங் களும் கேள்விப்பத்திரகாரரால் முதல் எழுத்துகள் இடப்பட்டி ருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரகாரர் தமது பூரணமான பெயர்களையும் விலாசங்களையும் பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகை யின் ஐந்து வீதத்தைக் குறிப்பிட்ட தவணைக்குள் வேலையை முடிப் பதற்குப் பிணைப்பணமாக கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித் தரமுடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரகாரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவ ருடைய பெயர் கொந்தராத்துக்காரரின் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட் டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவை கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

10. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவுத் திகதியில் இருந்து 3 கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

11. கமத்தொழில் அதிபருக்கு எந்தக் கேள்விப்பத்திரங்களையும் அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ உரிமையுண்டு.

12. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட /பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்து கூலி யாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும். இந் நிபந்தனைகளுள் ஏதா வது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரகாரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவர். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி நிரந்தரச் செயலாளரின் எழுத்து மூல அங்கீகாரத்தை பெற்றிருந்தால் மாத்திரமே இலங் கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெருது இலங்கையரல்லாத ஒரு வரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும். "இலங்கையர்" என்னும் பதம் இலங் கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவ ரையே குறிக்கும். அமைய ஊழியர்கள் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பள சட்ட திட்டங்களுக்கமைய இக் கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினுல் அதிகா மளிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தா வேசுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

13. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரகாரர்கட்கு நேரடி யாக அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது எனக் கருதப்படும்.

14. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

15. 1934 ஆம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினுல் செய்யப்படும் அரசாங்கத் தைப்பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவர்.

16. தாமதவேலை செய்யும் கொந்தராத்துக்காரர்களின் பட்டி யலில் சேர்க்கப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்கட்கு கமத் தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட் டார்.

17. மேலும் விபரங்கள் தேவைப்படின் வவுனியா மாவட்ட விவ சாய விசாலிப்பு உத்தியோகத்தரிடம் இருந்து பெற்றுக் கொள்ள லாம்.

ஈ. அபேரத்ன,
உதவி விவசாய பணிப்பாளர் (விசாலிப்பு).

விவசாய இலாகா,
பேராதனை, 23.7.70.

7-1158—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம்

### மோட்டார் வாகனங்களை வழங்குவதும் ஒப்படைப்பதும்

கொழும்பு 1, கோட்டை, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், பரிபாலனப் பிரிவு, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால், பின்வரும் வகையிலுள்ள வாகனங்களை வழங்குவதற்கும், ஒப்படைப்பதற்குமான கேள்விப்பத்திரங்கள் 1970 ஆகஸ்ட் 17 ம் திகதி மு. ப. 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| விடயம் | வாகனத்தின் வகை | தேவையான அளவு |
|---|---|---|
| 1. | வலது கை ஓட்டம், சாதாரண கட்டுப்பாடு கனம் கூடிய காற்றுத்தடுப்புக் கண்ணுடியும் மோட்டாரின் முன் புறத்தையும் அதன் உடற்பகுதியையும் இணைக்கும் பாகத்துடன் கூடிய அடிச் சட்டகமும், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உடற்கோப்புக்கு ஏற்க அமையக் கூடிய 6 உருளை (சிலிண்டர்) இயந்திரம் 3 தொன். ஒரு வருடத்துக்கு ஓட்டக்கூடிய உறுதிப் பாகங்கள் | 3 அடிச் சட்டகங்கள் |
| 2. | வலது கை ஓட்டம் சாதாரண/முன்னேக்கிய மத்திய சாதாரண கனமுள்ள நாலு உருளை டீசல் இயந் திரங்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உடற்கோப்பு களுக்கு 15/20 அந்தர் ஒரு வருடத்துக்கு ஓட்டக் கூடிய உறுதிப் பாகங்களுடன் | 3 அடிச் சட்டகங்கள் |
| 3. | வலது கைப்பக்கப் பெட்ரோலில் ஓட்டும் சாதாரண கனமுள்ள மோட்டார் வாகனம். 4 தொடக்கம் 6 ஆட்களை ஏற்றக் கூடிய ஸ்ரேசன் வகன் மாதிரி, ஒஸ் ரின் கேம்பிரிட்ஜ் மாதிரி ஒரு வருட ஓட்டத்துக்கான உறுதிப் பாகங்களுடன் | 3வாகனங்கள் |

கொழும்பு 1, லோட்டஸ் ரோட், அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம் பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில், இணைப் படியில் கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் வேண்டும். அத்துடன் அவரது அலுவலகத்தில் கேள்விப் பத்திர சாதனங்களையும் பரிசீலனை செய்யலாம்.

1971 ஆகஸ்ட் 31 ம் திகதிக்கு முன்பாக மேற்கூறிய வாகனங்களை வழங்குவதற்கும், ஒப்படைப்பதற்கும், கேள்வி கேட்போர் திட்டவட்டமாக உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

கோட்டை, ம. த. அ. தந்திக் காசாளரிடம் அல்லது ஒரு அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபரிடம் கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 200 கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்வி கேட்க விரும்புவோர், கொழும்பு 1, லோட்டஸ் வீதி, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியிய லாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, விண்ணப்பித்தால் அவர்களுக்கு, கேள்விப்பத்திரச் சாதனங்கள் 1970.8.13 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும்.

விவரக் கூற்றில் கேட்கப்பட்டுள்ளவாறு மேற்கூறப்பட்டுள்ள வாகனங் களுக்குத் தேவையான கருவிகளுக்கும், மாற்றுறுப்புகளுக்குமாக வேறு கக் கூறுவிலைகள் அனுப்பப்படுதல் வேண்டும்.

வி. எம். அபேசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம்,
லோட்டஸ் வீதி, கொழும்பு 1.

7-1179—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அநுராதபுர உப பிரிவு

அநுராதபுர உப பிரிவின் கீழ் உள்ள கீழ்க்காணும் வேலைகளுக்குக் கேள்விப் பத்திரங்கள் வட மத்திய பிரிவு பெரும் பகுதி நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு ஆவணி மாதம் 18 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

| வேலையின் விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| (1) வலது கரை வாய்க்காலையும் இடது கரை வாய்க்காலையும் தொடுக்கும் தெருவுக்குக் கல்லிட்டுத் தாரிடுதல் 0 மைல் 0 சங்கிலி—0 மைல் 26·40 சங்கிலி .. .. | 36,000 .. | 50 |
| (2) வலது கரை வாய்க்காலையும் இடது கரை வாய்க்காலையும் தொடுக்கும் தெருவுக்குக் கல்லிட்டுத் தாரிடுதல். 26·40 சங்கிலி—1 மைல் .. .. | 36,000 .. | 50 |
| (3) வலது கரை வாய்க்காலையும் இடது கரை வாய்க்காலையும் தொடுக்கும் தெருவுக்குக் கல்லிட்டுத் தாரிடுதல். 1 மைல் 0 சங்கிலி—1 மைல் 26·40 சங்கிலி .. .. | 36,000 .. | 50 |
| (4) மகாவிலாச்சியில் இருக்கும் துணுஓயாவுக்கு மேல் 14 அடி அகலமும் 100 அடி நீளமுமான 3 ஸ்பான் பாலம் அமைத்தல் .. | 32,000 .. | 50 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்கூறிய தொகைகளுக்கோ அல்லது அதற்கு மேலோ பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதி உடையவராவர்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் அநுராதபுரம், மகாகனதராவை, பதவிய, இராசாங்கணை ஆகிய நீர்ப்பாசன கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ம் திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்திக் கேள்விப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன், கேள்விக் கட்டணமாக மேற்கூறிய தொகையைக் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் கந்தோர்களில் செலுத்த வேண்டும். இப்பணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காண்பித்தாலும் போதுமானது.

4. மேலதிக விபரங்களை அநுராதபுர நீர்ப்பாசன உபபிரிவு கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யூ. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அநுராதபுர உபபிரிவு.

அநுராதபுரம்,
1970 ம் ஆ ஆடி மீ 20 ந உ.

7–1185—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## சமூக சேவைப் பகுதி

### கொக்கல, மிரிகாமம், அனுராதபுரம், கைதடி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வயோதிப இல்லங்கட்குச் சேவைகள் செய்வதற்கும் பொருட்கள் சப்ளை செய்வதற்கும் கேள்விப்பத்திரங்கள்

1970 ஆம் ஆண்டு ஒற்ரோபர் 1 ஆம் திகதி முதல், 1971 ஆம் ஆண்டு செத்தெம்பர் 30 ஆம் திகதிவரை, 2 ஆம் பந்தியிற் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட சேவைகளை ஆற்றுவதற்கும், பொருட்களைச் சப்ளை செய்வதற்கும், பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமூக சேவைப் பகுதி அதிகாரி ஏற்பார்.

2. கொக்கல, மிரிகாமம், அனுராதபுரம், கைதடி ஆகிய பகுதியிலுள்ள அரசினர் வயோதிப இல்லங்களில் அல்லது இந்தக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிப்பத்திரத்தில், இரட்டைப் பிரதியில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் சம்பந்தமான ஒப்பந்த நிபந்தனைகள், மாதிரிப்பத்திரங்கட்கு விண்ணப்பிக்கும் சமயத்தில், கேள்வியாளர்கட்கு விளக்கப்படும். பின்னல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட சேவைகளுள் ஒன்றிற்காவது, அல்லது பலவிற்காவது கேள்விகளை அனுப்பலாம். ஒவ்வொரு இல்லஞ் சம்பந்தமான சேவைக்கும் அல்லது ஒவ்வொரு இல்லஞ் சம்பந்தமான சப்ளைக்கும், பிரத்தியேகமான ஒவ்வோர் கேள்வி பதிவு செய்த தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

3. கேள்விகள், 1970 ம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆம் திகதி, பகல் 12 மணிக்கு மூடப்படும். இதே தினத்தில், பிற்பகல் 2.30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில், கேள்வியாளர்கள் நேரில் சமூகமளிக்கலாம். கேள்வியாளர்களின் பெயர்களும், விதிதங்களும், நேரில் சமூகமளிக்கும் கேள்வியாளர்கட்கு வாசித்துக் காட்டப்படும்.

4. பின்னுற் கொடுக்கப்பட்ட அட்டவணையின் 3 ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட கட்டுப்பணத் தொகையை என்னிடம் இந்தக் காரியாலயத்தில், அல்லது கொக்கல, மிரிகாமம், அனுராதபுரம், கைதடி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வயோதிப இல்லங்களிலுள்ள அதிபர்களிடம் கட்டிப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்வி விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப் பத்திரங்கட்குத் தபால்

மூலம் விண்ணப்பஞ் செய்பவர்கள் நேரத்துடன், கட்டுப்பணத்தொகையைச் சமூக சேவை அதிகாரிக்கு எழுதப்பட்ட மணிஒடர் மூலம் இக்காரியாலயத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேரத்துடன் ஒருவர் கேள்வி விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் குறிக்கப்பட்ட திகதிக்குமுன், கேள்விகளை அனுப்புவதற்கு இதுவே முறை.

தெரிந்தெடுக்கப்படாத கேள்வியாளர்களின் கட்டுப்பணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

5. இக்காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில், கேள்விகளை நேரில் கொண்டுவந்து போடலாம். அல்லது, கேள்விகளைப் பதிவுசெய்யப்பட்ட தபாலில் " சமூக சேவை அதிகாரி, சமூக சேவைப் பகுதி, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 3 " என்ற விலாசத்திற்கு அனுப்பலாம். தபால் உறையில் இடதுகை மேல் மூலையில், **" சப்ளைகட்கும் சேவைகட்கும் கேள்விகள் 1970/71 "** அரசினர் வயோதிப இல்லம் : .................................................................................................................................(அரசினர் வயோதிபர் இல்லத்தின் பெயரை எழுதவும்) என்ற வார்த்தைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. கேள்வி விண்ணப்பப் பத்திரங்களைச் சரியாகவும், பூரணமாகவும், நிரப்பி அனுப்பும்படி கேள்வியாளர்களை வேண்டிக்கொள்கிறோம் சரியாக நிரப்பப்படாத கேள்விகளை ரத்துச்செய்வதற்குச் சமூக சேவை அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

7. தெரிவு செய்யப்பட்ட ஒரு கேள்வியாளருக்கு, அன்னாரின் தெரிவு பற்றி அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், கேள்வியாளர்கள், ஒப்பந்தஞ் செய்யத் தவறினால், அல்லது கட்டுப்பணம் கட்டத்தவறினால், ஆரம்பத்தில் கட்டிய கட்டுப்பணத்தை அன்னார் இழக்க வேண்டி நேரிடும்.

8. எந்த ஒரு கேள்வியையாவது அல்லது எல்லாக் கேள்விகளையுமாவது, ஒருவருடத்திற்கு மேற்படாத ஒரு காலவெல்லைக்குட்பட்ட ஒரு கேள்வியையாவது விசாரணையின்றி ரத்துச்செய்ய அரசாங்கத்திற்குச் சகல அதிகாரமும் உண்டு.

சமூக சேவைப் பகுதி,
பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 3, 20 யூலை, 1970.

பிரேமச்சந்திரா டி சில்வா,
சமூக சேவை அதிகாரிக்குப் பதிலாக.

**அட்டவணை**

| (1)<br>தாபனத்தின் பெயர் | (2)<br>சப்ளை அல்லது சேவை | (3)<br>கேள்விக் கட்டுப்பணம்<br>ரூபா | (4)<br>பிணைவைப்பு<br>ரூபா |
|---|---|---|---|
| 1. அரசினர் வயோதிபர் இல்லம், மிரிகாமம் | விறகு வற்றிச் செல்வதற்கு | 10 | ரூபா 100/– .மேற்கொண்டு ரூபா 90/– தெரிந்தெடுக்கப்பட்ட கேள்வியாளரால், பாக்கிப் பிணைவைப்பாக ஒப்பந்த செய்யமுன் கட்டப்படல் வேண்டும் |
| 2. கைதடி அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 10 | ஷை |
| 3. அனுராதபுரம் அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 10 | ஷை |
| 4. கொக்கல அரசினர் வயோதிபர் இல்லம் | சவப்பெட்டி சப்ளை செய்வதற்கு | 10 | ரூபா 25/– மேற்கொண்டு ரூபா 15/– தெரிந்தெடுக்கப்படும் கேள்வியாளரால் பாக்கிப் பிணைவைப்பாக ஒப்பந்தஞ் செய்யப்படுமுன் கட்டப்படல் வேண்டும் |
| 5. மிரிகாமம் அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 10 | ஷை |
| 6. அனுராதபுரம் அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 10 | ஷை |
| 7. கைதடி அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 10 | ஷை |
| 8. கொக்கல அரசினர் வயோதிபர் இல்லம் | அழுக்குத்துணிகளைச் சலவை செய்வதற்கு | 25 | ரூபா 100/– மேற்கொண்டு, ரூபா 75/– தெரிந்தெடுக்கப்படும் கேள்வியாளரால் பாக்கிப் பிணைவைப்பாக ஒப்பந்தஞ் செய்யப்படுமுன் கட்டப்படல் வேண்டும் |
| 9. மிரிகாமம் அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 25 | ஷை |
| 10. அனுராதபுரம் அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 25 | ஷை |
| 11. கைதடி அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 25 | ஷை |
| 12. கொக்கல அரசினர் வயோதிபர் இல்லம் | ஒரு பகுதிநேரமுடிவினைஞர். முகம் வழிப்பதற்கும், முடிதிருத்துவதற்கும் | 10 | ரூபா 50/– மேற்கொண்டு, ரூபா 40/– தெரிந்தெடுக்கப்படும் கேள்வியாளரால் பாக்கிப் பிணைவைப்பாக ஒப்பந்தஞ் செய்யப்படுமுன் கட்டப்படல் வேண்டும் |
| 13. மிரிகாமம் அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 10 | ஷை |
| 14. அனுராதபுரம் அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 10 | ஷை |
| 15. கைதடி அரசினர் வயோதிபர் இல்லம் | ஷை | 10 | ஷை |

**7–1071—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917**

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர முடிவுகள்

| விடயம் | முடிவடைந்த திகதி | இடைக்கப் பெற்ற விலைக் குறிப்பீடுகளின் எண்ணிக்கை | சித்தியெய்திய கேள்விப் பத்திரகாரரின் பெயரும் முகவரியும் | அளிப்பு | தொன் ஒன்றின் விகிதம் வேலை நேரம் | வேலை நேரத்தின் பின் | ஒப்படைச் சரக்கு ஒன்றிற்குரிய ஆகக் குறைந்த கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா | ரூபா | ரூபா |
| | | | | **கொழும்புத் துறைமுகத்திலிருக்கும் கப்பற் சரக்கை அகற்றுதல், கொண்டு செல்லல், அத்துடன் ஒப்படைத்தல்** | | | |
| கப்பற் சரக்கை அகற்றுதல், கொண்டு செல்லல், மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கான கேள்விப் பத்திரம் 1970/1971 | 25.2.70 .. | 7 (ஏழு) .. | த கார்கோ போட் டிஸ்பெச் கம். லிமிடெட், இராணி வீதி, கொழும்பு 1 | **விடயம் இல. 1**—மூலப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை அகற்றுவதற்கும் மற்றும் துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இடத்திலிருந்து அல்லது பண்டகசாலையில் இருந்து கொண்டு செல்லுதல், ஒப்படைத்தல் மற்றும் வாழைச்சேனைக்கு அனுப்பப்படவிருக்கும் இலங்கை அரசாங்கப் புகையிரத சுமை வண்டிகளில் அல்லது பார வண்டிகளில் அடுக்குதல் ஆகியவற்றிற்கான எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 4 00 .. | 6 00 .. | 47 50 |
| | | | | **விடயம் இல. 2**—மூலப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் இதர பொருட்களை அகற்றுவதற்கும் மற்றும் துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இடத்திலிருந்து அல்லது பண்டகசாலையில் இருந்து கொண்டு செல்லல், ஒப்படைத்தல் மற்றும் வாழைச்சேனைக்கு அனுப்பப்படவிருக்கும் லொறிகளில் அடுக்குதல் ஆகியவற்றுக்கான எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 3 00 .. | 4 50 .. | 45 00 |
| | | | | **விடயம் இல. 3**—சுங்கப் பகுதி மற்றும் துறைமுகச் (சரக்கு) கூட்டுத்தாபனத்தாரால் வகுக்கப்பட்ட " துயரளி கப்பற் சரக்குகளை " துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இடத்திலிருந்து அல்லது பண்டகசாலையிலிருந்து கொண்டு செல்லுதல், ஒப்படைத்தல் மற்றும் வாழைச்சேனைக்கு அனுப்பப்படவிருக்கும் இலங்கை அரசாங்கப் புகையிரதச் சுமை வண்டிகளில் அல்லது பார வண்டிகளில் அடுக்குதல் ஆகியவற்றிற்கான எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 8 00 .. | 12 00.. | 75 00 |
| | | | | **விடயம் இல. 4**—எம்மால் இறக்குமதி செய்யப்படும் கடதாசி மற்றும் கடதாசி அட்டைகளை லொறிகளில் அடுக்குதல் அவைகளை கொழும்பு நகர சபை எல்லைக்குள் இருக்கும் எந்த ஒரு இடத்திலும் ஒப்படைத்தல் ஆகியவற்றுக்கான மைல் ஒன்றிற்கு ஒரு தொன் வீதம் எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 4 50 .. | 6 50 .. | 50 00 |
| | | | | **விடயம் இல 5**—எம்மால் இறக்குமதி செய்படும் கடதாசி மற்றும் கடதாசி அட்டைகளை லொறிகளில் அடுக்குதல், அவைகளை கொழும்பு நகர சபை எல்லைக்கு வெளியில் இருக்கும் எந்த ஒரு இடத்திலும் ஒப்படைத்தல் ஆகியவற்றுக்கு ஆன மைல் ஒன்றிற்கு ஒரு தொன் வீதம் எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 3 50 .. | 5 00 .. | 60 00 |
| | | | | **விடயம் இல. 6**—பார்சல் தபாலிலும் மற்றும் விமான மூலம் வரும் பொருட்களை அகற்றுதல், மற்றும் அவைகளை கொழும்பு நகர சபை எல்லைக்குள் இருக்கும் எந்த ஒரு இடத்திலும் ஒப்படைத்தல் ஆகியவற்றுக்கான எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 20 00.. | 30 00.. | —— |
| | | | | **திருகோணமலை துறைமுகத்திலிருக்கும் கப்பற் சரக்கை அகற்றுதல், கொண்டு செல்லல், அத்துடன் ஒப்படைத்தல்** | | | |
| | | | | **விடயம் இல. 1** திருகோணமலை துறைமுக எல்லைக்குள் இருக்கும் எந்த ஒரு இடத்திலிருந்தோ அல்லது பண்டகசாலையிலிருந்தோ கப்பற் சரக்கை அகற்றுதல், கொண்டு செல்லல் அவைகளை ஒப்படைத்தல் அத்துடன் வாழைச்சேனைக்கு அனுப்பப்படவிருக்கும் அவ்வெல்லையினுள்ள லொறிகளில் அடுக்குதல் ஆகிவற்றிற்கான எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 5 00 .. | 7 00 .. | 35 00 |

| விடயம் | முடிவடைந்த திகதி | கிடைக்கப்பெற்ற விலைக் குறிப் பீடுகளின் எண்ணிக்கை | சித்தியெய்திய கேள்விப் பத்திர காரரின் பெயரும் முகவரியும் | அளிப்பு திருகோணமலை துறைமுகத் திலிருக்கும் கப்பற் சரக்கை அகற்றுதல், கொண்டுசெல்லல், அத்துடன் ஒப்படைத்தல் | தொன் ஒன்றின் விகிதம் வேலை நேரம் | வேலை நேரத்தின் பின் | ஒப்படைச் சரக்கு ஒன்றிற் குரிய குறைந்த கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா | ரூபா | ரூபா |
| | | | | விடயம் இல. 2—திருகோணமலைத் துறைமுக எல்லைக்குள் எந்த ஒரு இடத்திலிருந்தோ அல்லது பண்டகசாலையிலிருந்து கொண்டு செல்லல், ஒப்படைத்தல் மற்றும் வாழைச் சேனைக்கு அனுப்பப்படவிருக்கும் இலங்கை அரசாங்க புகையிரதச் சுமை வண்டிகளில் அல்லது பார வண்டிகளில் அடுக்குதல் ஆகியவற்றிற்கான எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 6 00 .. | 8 90 .. | 45 00 |
| | | | | விடயம் இல. 3—சுங்கப் பகுதி மற்றும் துறைமுகச் (சரக்குக்) கூட்டுத்தாபனத்தால் வகுக்கப்பட்ட " துயரளி கப்பற் சரக்குகளை " திருகோணமலைத் துறைமுகத்திற்குச் சொந்தமான இடத்தில் இருந்தோ அல்லது பண்டகசாலையில் இருந்து கொண்டு செல்லுதல், ஒப்படைத்தல் மற்றும் வாழைச்சேனைக்கு அனுப்பப்படவிருக்கும் இலங்கை அரசாங்க புகையிரத சுமைவண்டிகளில் அல்லது பார வண்டிகளில் அடுக்குதல் ஆகியவற்றிற்கான எல்லாம் உட்பட அகற்றுதல் கட்டணங்கள் | 9 00 .. | 12 00 .. | 75 00 |

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ஆடு ஜூலை மீ 13 ந உ.

7–1092—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### கடற்றொழில் திணைக்களம்

**பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்களின் ஏல விற்பனை**

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும், இடங்களிலும், பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்கள் காலை 9.30 மணிக்குப் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிப்பிடப்பட்ட இடங்களில் என்ஜின்களைப் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாக பின்வரும் முறைப்படி செலுத்தப்படவேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக என்ஜின் விற்கப்பட்ட விலையில் ¼ ;

(ஆ) என்ஜின் விற்கப்பட்ட விலையின் மீதி ¾ மூன்று நாட்களுட் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) எந்த ஒரு என்ஜினைக் குறித்து விலை கேட்டல் தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி உரிமை அல்லது தள்ளுபடியாக்கல், விற்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்கள் வரை ஒதுக்கி வைக்கப்படும். இந்த வகையில், என்ஜினின் விற்பனை விலையின் ¼ பங்கை வைப்புப் பணமாகவும், விற்பனை முடிந்தவுடனேயே பணமாகச் செலுத்த வேண்டும். விலை கேட்டல் ஏற்கப்படுமாயின், விற்பனை விலையின் மீதி ¾ பங்கும், இறுதியாக ஏற்றுக்கொள்ளல் அறிவித்தலுக்கு 3 நாட்களுக்கு முன்னராக செலுத்தப்பட வேண்டும். இப்படிச் செய்யத் தவறின், வைப்புப் பணம் இழத்தலில் முடியும். விலை கேட்டலைத் தள்ளுபடி செய்யின் ... ப் பணம் மீளளிக்கப்படும்.

4. ஏலத்தில் விற்ற என்ஜின், உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தும் வரை, அவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையின் வாங்கியவனைச் சாரும்.

நிரல்

| வள்ள எண் | என்ஜினின் இனம் | இடம் | ஏலத்தின் தேதி |
|---|---|---|---|
| — | அலிஸா கிரேக் (178–சீஎப் 10842) | சுகததாச வள்ளச்சாலை, மட்டக்குளி | 1970. 9.18 |
| ரீ 224 | யன்மார் | கடற்றொழில் அலுவலகம், பாணந்துறை | 1970. 9.14 |
| எஸ்ஜீசீ 125 | ரோர்பிடோ | ஷை | |
| எஸ்ஜீசீ 105 | அமைதியாக்கியும், பல்படியும் | ஷை | |
| ஜேபீ 26 | குபோட்டா | ஷை | |
| எஸ் 247 | பேர்க்கின்ஸ் | கடற்றொழில் அலுவலகம், பலப்பிட்டியா | 1970. 9.18 |
| ரீ 377 | கெல்வின் | கடற்றொழில் அலுவலகம், அம்பலாங்கொடை | 1970. 9.19 |
| எஸ் 199 | 22 ப. வ. லிஸ்ரர் | கடற்றொழில் அலுவலகம், வெலிகமை | 1970. 9.17 |
| ரீ 388 | 22 ப. வ. லிஸ்ரர் | ஷை | |
| எஸ் 179 | நோத் பவர் | ஷை | |
| — | என்ஜினின் பாகங்கள் | ஷை | |
| ரீ 312 | பெற்றர் .. | ஷை | |
| எஸ் 14 | யன்மார் | ஷை | |
| எஸ்ஜீசீ 92 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், திக்வெல்லை | 1970. 9.18 |
| எஸ் 173 | லிஸ்ரர் | ஷை | |
| எஸ் 142 | 20 ப. வ. கெல்வின் | கடற்றொழில் அலுவலகம், தங்காலை | 1970. 9.19 |
| ரீ 295 | 16 ப. வ. யன்மார் | ஷை | |
| ஜேபீஎப் 40 | டியூற்ஸ் | கடற்றொழில் அலுவலகம், அம்பாந்தோட்டை | 1970. 9.14 |
| ரீ 106 | 11 ப. வ. புக் | பெரும்பகுதிக் கடற்றொழில் அலுவலகம், நீர்கொழும்பு | 1970.10.8 |
| ரீ 88 | 9 ப. வ. டியூற்ஸ் | ஷை | |
| ரீ 18 | 8 ப. வ. யன்மார் | ஷை | |
| ரீ 73 | அலிசா கிரேக் | ஷை | |
| எஸ்ஜீசீ 75 | ரோர்பிடோ | ஷை | |
| ரீ 16 | யன்மார் | ஷை | |
| எஸ் 18 | பார்சன்ஸ் | ஷை | |
| ரீ 80 | புக் .. | கடற்றொழில் அலுவலகம், கட்டுநேரியா | 1970.10.10 |
| எப் 21 | புக் .. | ஷை | |
| ஜேபீஎப் 48 | 17 ப. வ. குபோட்டா | ஷை | |
| 324 | 16 ப. வ. பெற்றர் | கடற்றொழில் அலுவலகம், சிலாபம் | 1970.10.11 |
| 328 | 16 ப. வ. பெற்றர் | ஷை | |
| எஸ் 1 | கெல்வின் | கடற்றொழில் அலுவலகம், கல்ப்பிட்டியா | 1970.10.3 |
| எஸ் 24 | 12½ ப. வ. லிஸ்ரர் | ஷை | |
| டபிள்யூஎப் 2 | 22 ப. வ. டையா | ஷை | |
| ஜேபீ 77 | ரஸ்ஸியன் | ஷை | |
| எம்சீ 48 | கெல்வின் | கடற்றொழில் அலுவலகம், பருத்தித்துறை | 1970.10.23 |
| ஜேபீ 63 | புக் .. | ஷை | |
| என்எல் 51 | புக் .. | ஷை | |
| வீகேஎஸ் 30 | அலிஸா கிரேக் | கடற்றொழில் அலுவலகம், காங்கேசன்துறை | 1970.10.24 |
| எஸ்ஜீசீ 64 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், ஊர்காவற்றுறை | 1970.10.26 |
| எஸ் 381 | ரோர்பிடோ | ஷை | |
| எஸ்ஜீசீ 126 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், தாளையடி | 1970.10.28 |
| எஸ் 382 | புக் 2 சிலிண் | ஷை | |
| எஸ்ஜீசீ 127 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், முல்லைத்தீவு | 1970.10.15 |
| எஸ்ஜீசீ 102 | ரோர்பிடோ | ஷை | |
| எஸ்ஜீசீ 124 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், பேசாலை | 1970.10.17 |
| எஸ்ஜீசீ 76 | ரோர்பிடோ | ஷை | |
| எஸ்ஜீசீ 85 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், தோட்டவெளி | 1970.10.18 |
| எஸ்ஜீசீ 121 | ரோர்பிடோ | ஷை | |
| ஜேபீ 83 | ரஸ்ஸியன் | ஷை | |
| எம்சீ 136 | புக் .. | கடற்றொழில் அலுவலகம், திருகோணமலை | 1970.10.2 |
| டபிள்யூ 11 | யன்மார் | ஷை | |
| எஸ் 276 | புக் .. | ஷை | |
| டபிள்யூ 4 | புக் .. | ஷை | |
| எஸ்ஜீசீ 137 | ரோர்பிடோ | ஷை | |
| ஜீவபீ 22 | 31 ப. வ. புக் | ஷை | |
| ஜேபீஎப் 53 | அலிசா கிரேக் | கடற்றொழில் அலுவலகம், செங்கலடி | 1970.10.3 |
| ரீ 48 | 8 ப. வ. யன்மார் | கடற்றொழில் அலுவலகம், மட்டக்களப்பு | 1970.10.4 |

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 23 ந் வ.

டபிள்யூ. பத்திறண,
கடற்றொழில் இயக்குநர்.

7-1167—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## கடற்றொழில் திணைக்களம்

### யந்திரம் உள்ளனவும்/யந்திரம் இல்லாதனவுமான பயனுறுத்தப்பட்ட வள்ளங்களின் ஏல விற்பனை

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும் இடங்களிலும் யந்திரம் உள்ளனவும்/யந்திரம் இல்லாதனவுமான பயனுறுத்தப்பட்ட வள்ளங்கள காலை 9.30 மணிக்குப் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிப்பிடப்பட்ட இடங்களில் வள்ளங்களைப் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாக, பின்வரும் முறைப்படி செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக, வள்ளம் விற்கப்பட்ட விலையில் $\frac{1}{4}$ ;

(ஆ) வள்ளம் விற்கப்பட்ட விலையின் மீதி $\frac{3}{4}$, மூன்று நாட்களுட் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) எந்த ஒரு வள்ளம்/என்ஜினைக் குறித்து விலை கேட்டல் தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி உரிமை அல்லது தள்ளுபடியாக்கல், விற்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்கள் வரை ஒதுக்கி வைக்கப்படும். இந்த வகையில் வள்ளத்தின்/என்ஜினின் விற்பனை விலையின் $\frac{1}{4}$ பங்கை வைப்புப் பணமாகவும், விற்பனை முடிந்தவுடனேயே பணமாகச் செலுத்த வேண்டும். விலை கேட்டல் ஏற்கப்படுமாயின், விற்பனை விலையின் மீதி $\frac{3}{4}$ பங்கும், இறுதியாக ஏற்றுக்கொள்ளல் அறிவித்தலுக்கு 3 நாட்களுக்கு முன்னராகச் செலுத்தப்பட வேண்டும். இப்படிச் செய்யத் தவறின், வைப்புப் பணம் இழத்தலில் முடியும். விலை கேட்டலைத் தள்ளுபடி செய்யயின் வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

4. ஏலத்தில் விற்ற வள்ளம், உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தும் வரை, அவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையில் வாங்கியவரையே சாரும்.

#### நிரல்

| வள்ள எண் | என்ஜினின் இனம் | இடம் | ஏலத்தின் தேதி |
|---|---|---|---|
| ஜேபீஎப் 11 | — | ஹரிசன் லிஸ்ரர் வள்ளச்சாலை, கொம்பனித்தெரு | |
| எம்சீ 5 | — | ஷை | 1970. 9.9 |
| எஸ் 175 | அவிஸா கிரேக் | ஷை | |
| எஸ்ஜசீ 105 | ரோர்பிடோ 24 ப. வ. | முகத்துவாரக் கடற்கரை | 1970. 9.10 |
| எஸ் 118 | — | எம். ஜே. டயஸ் வள்ளச்சாலை, மட்டக்குளி | 1970. 9.11 |
| எஸ்ஜசீ 42 | ரோர்பிடோ | இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வள்ளம் கடலில் இறக்கும் இடம், மட்டக்குளி | 1970. 9.12 |
| ரீ 224 | — | கல்கிஸை கடற்கரை | 1970. 9.13 |
| எஸ்ஜவீ 105 | (சுக்கான் மாத்திரம்) | கடற்றொழில் அலுவலகம், பாணந்துறை | 1970. 9.14 |
| எல் 2 | — | கட்டுக்குருந்த கூட்டுறவு வள்ளம் சமைக்கப்படும் வள்ளச்சாலை, களுத்துறை வடக்கு | |
| ரீ 289 | — | ஷை | |
| ரீ 175 | யன்மார் | ஷை | |
| கேபீ 1 | — | ஷை | 1970. 9.16 |
| வீஜே 6 | — | ஷை | |
| எம்ஜேடீ 12 | லிஸ்ரர் 22 ப. வ. | ஷை | |
| எம்சீ 109 | — | மருதானை, வேருவளை | |
| ஜேபீஎப் 21 | — | ஷை | |
| ரீ 237 | யன்மார் | ஷை | |
| ரீ 386 | — | ஷை | |
| எஸ் 164 | — | ஷை | 1970. 9.17 |
| எல் 7 | — | ஷை | |
| ரீ 211 | — | நவலங்கா வள்ளச்சாலை, வேருவளை | |
| எஸ் 234 | என்ஜின் ஒரு பகுதி வள்ளத்தினுள் | பலப்பிட்டியாக் கடற்கரை | |
| என்எல் 24 | — | ஷை | |
| எஸ்ஜசீ 90 | ரோர்பிடோ | ஷை | 1970. 9.18 |
| ரீ 369 | — | ஷை | |
| எஸ்ஜசீ 178 | — | ஷை | |
| ஜேபீ 10 | — | பலப்பிட்டியா கடற்றொழில் அலுவலகத்துக்கு அண்மையில் | |
| ரீ 377 | — | அம்பலாங்கொடைக் கடற்கரை | 1970. 9.19 |
| ரீ 153 | புக் | ஹிக்கடுவைக் கடற்கரை | 1970. 9.20 |
| எஸ் 199 | — | மாகல்லைக் கடற்கரை | 1970. 9.9 |
| எஸ்ஜசீ 1 | — | கந்தறைக் கடற்கரை | 1970. 9.10 |
| எஸ் 93 | 10 ப. வ. குபோட்டா | மிரிஸ்ஸாக் கடற்கரை | 1970. 9.11 |
| எஸ் 108 | யன்மார் | ஷை | |
| எல் 4 | (கொட்டுவின் சில பாகங்கள்) | கடற்றொழில் அலுவலகம், வெலிகமை | |
| ரீ 343 | (கப்பலேணிவாசல் மூடியும் 2 தட்டுப் பலகைகளும்) | ஷை | |
| எஸ் 27 | (கப்பலேணிவாசல் மூடியும் சுக்கானும்) | ஷை | 1970. 9.12 |
| எஸ் 86 | ஷை | ஷை | |
| எஸ் 113 | (2 கப்பலேணி வாசல் மூடியும் 1 சுக் கானும் | ஷை | |
| ரீ 295 | — | தங்காலைக் கடற்கரை | |
| எஸ்ஜசீ 15 | — | ஷை | 1970. 9.13 |
| என்எல் 2 | — | ஷை | |
| எஸ்ஜசீ 217 | — | அம்பாந்தோட்டைக் கடற்கரை | 1970. 9.14 |
| எஸ் 32 | பார்சன்ஸ் | குட்டிதூவை | |
| ரீ 18 | 8 ப. வ. யன்மார் | ஷை | 1970. 9.23 |
| எம்வீ 7 | பார்சன்ஸ் (துண்டம் மாத்திரம்) | ஷை | |
| எஸ் 18 | — | ஷை | |
| எஸ் 20 | — | ஜேபீஎப் வள்ளச்சாலை, நீர்கொழும்பு | 1970. 9.24 |
| ரீ 44 | — | தலாதூவை, நீர்கொழும்பு | 1970. 9.25 |

| வள்ள எண் | என்ஜினின் இனம் | இடம் | ஏலத்தின் தேதி |
|---|---|---|---|
| ரீ 37 | 11 ப. வ. பார்சன்ஸ் | நீர்கொழும்புக் கடற்கரை | |
| ரீ 51 | — | அளுத்கூறுவை, நீர்கொழும்பு | |
| ரீ 71 | — | ௸ | 1970. 9.26 |
| ரீ 103 | — | ௸ | |
| எஸ் 78 | — | ௸ | |
| ரீ 73 | — | பிற்றிப்பனைத் தெரு, நீர்கொழும்பு | 1970. 9.27 |
| ரீ 159 | — | சேத்தப்பாடுவை, நீர்கொழும்பு | 1970. 9.28 |
| எஸ்ஜசி 75 | — | தலாகலைத் தெரு, நீர்கொழும்பு | 1970. 9.30 |
| எஸ்ஜீசி 103 | ரோர்பிடோ | நாட்டுப்பாட்டுக் கரை, சிலாபம் | 1970.10.1 |
| ரீ 473 | — | சிலாப பாலத்துக்கு அண்மையில் | 1970. 10.2 |
| ரீ 52 | என்ஜினின் பகுதி வள்ளத்தினுள் | கல்ப்பிட்டியா | 1970.10.3 |
| எஸ்எல் 51 | — | பவர் கிருப்ட் வள்ளச்சாலை, யாழ்ப்பாணம் | |
| எஸ்ஜசி 84 | 24 ப. வ. ரோர்பிடோ | ௸ | 1970. 9.16 |
| எம்சி 83 | — | ௸ | |
| ரீ 136 | 10 ப. வ. புக் | ௸ | |
| டிசி 4 | — | வல்வெட்டித்துறைக் கடற்கரை (கொட்டியார்) | 1970. 9.17 |
| எஸ் 335 | பேர்க்கின்ஸ் | மயிலிட்டிக் கடற்கரை | 1970. 9.18 |
| எம்சி 30 | — | வேலணை | 1970. 9.19 |
| எம்சி 84 | — | கரைக்கோப்பு | 1970. 9.20 |
| ரீஎஸ் 51 | — | ௸ | |
| ரீஎஸ் 59 | — | ஊர்காவற்றுறை | 1970. 9.24 |
| ஜேபீ 63 | — | கடற்றொழில் அலுவலகம், கரையூர் | 1970. 9.23 |
| எஸ்ஜசி 67 | — | இன்பருட்டி, யாழ்ப்பாணம் | 1970. 9.26 |
| எஸ்ஜசி 8 | — | சலாப்பி ஆறு, திருகோணமலை | 1970.10.1 |
| எம்சி 136 | — | உள் துறைமுகம், திருக்கோணமலை | |
| எம்சி 117 | — | ௸ | |
| டபிள்யூ 4 | — | ௸ | |
| எஸ்ஜசி 137 | — | ௸ | 1970.10.2 |
| எஸ் 276 | — | ௸ | |
| ஆர்எஸ் 9 | 30 ப. வ. பேர்க்கின்ஸ் (துண்டம் மாத்திரம்) | ௸ | |
| ரீ 235 | — | சிலோன் ஷப்யார்ட், சீனக்குடா | 1970.10.3 |
| எஸ் 71 | லிஸ்ரர் | இலங்கைக் கடற்படையினர் இடம், திருகோணமலை | 1970.10.4 |
| வீஜே 17 | புக் | மன்னார் பாலத்துக்குக் கிட்ட | 1970.10.5 |
| ரீஎஸ் 61 | — | தெற்கு பார், மன்னார் | 1970.10.6 |
| ரீஎஸ் 21 | — | நாட்டுக்குடாக் கடற்கரை | 1970.10.8 |
| எஸ்ஜசி 121 | — | எருக்கலம்பிட்டி | 1970.10.9 |
| எஸ்ஜசி 85 | — | ௸ | |
| ஜேபீ 84 | — | வங்காலை | 1970.10.10 |
| எஸ்ஜசி 76 | — | தலைமன்னார் | |
| எஸ்ஜசி 124 | — | ௸ | 1970.10.11 |
| எஸ் 326 | — | ௸ | |
| எஸ் 117 | — | செல்வம் வள்ளச்சாலை, முல்லைத்தீவு | 1970.10.13 |
| எஸ் 92 | 8 ப. வ. யன்மார் | ஆர். வீ. டீ. பீ., அம்பாறை | 1970.10.8 |
| டபிள்யூ 5 | — | உப்போடை | 1970.10.9 |

டபிள்யூ. பத்திறணை,
கடற்றொழில் இயக்குநர்,

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 23 ந் 6.

7–1168—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## கடற்றொழில் திணைக்களம்

**பயனுறுத்தப்பட்ட கடலக வெளியிணை மோட்டர்களின் ஏல விற்பனை**

கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள தேதிகளிலும், இடங்களிலும் கடலக டீசல் வெளியிணை மோட்டர்கள் காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. அட்டவணையில் கொடுத்திருக்கும் இடங்களில் வெளியிணை மோட்டர்களைப் பார்வையிடலாம்.

3. விற்பனையில் வாங்கியவர், வெளியிணை மோட்டருக்கான முழுப் பணத்தையும் உடனடியாகச் செலுத்தி, அதனை விற்பனை நடந்த நாளிலேயே அப்புறப்படுத்த வேண்டும்.

### அட்டவணை

| வெளியிணை மோட்டரின் இனம் | இடம் | ஏலத்தின் திகதி |
|---|---|---|
| மேர்க்குறி 6 பரிவலு | கடற்றொழில் அலுவலகம், சிலாபம் | 1970.8.19 |
| ஜோன்சன் 5½ பரிவலு | பெரும்பகுதிக் கடற்றொழில் அலுவலகம், நீர்கொழும்பு | |
| மேர்க்குறி 6 பரிவலு | ௸ | 1970.8.17 |
| பிரிட்டிஷ் அன்சானி 6·5 பரிவலு | ௸ | |

கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 20 ந் 6.

7–1115—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## ஏலவிற்பனை

உபயோகிக்கப்பட்ட பின்வரும் பொருள்கள், கொழும்பு 3, சேர் ஏணெஸ்ற் டி சில்வா மாவத்தையிலுள்ள அலுவலக வளவில் 7.8.70 அன்று மு.ப. 10.30 இற்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இப்பொருள்களை அலுவலக நேரத்திற் பார்வையிடலாம்.

2 ஒலிம்பியா தட்டெழுத்துப்பொறிகள் (சிங்களம்)
2 இம்பீரியல் தட்டெழுத்துப்பொறிகள் (ஆங்கிலம்)
2 றெமிங்ரன் தட்டெழுத்துப்பொறிகள் (தமிழ்)
1 சைக்கிள் (சீனதேசத் தயாரிப்பு)

டபிள்யு. ஏ. ஜயவர்த்தன,
ஆணையாளர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
58, சேர் ஏணெஸ்ற் டி சில்வா மாவத்தை,
கொழும்பு 3,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந உ.

7–1134—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

---

## அறிவித்தல்

வெற்றுத் தகரங்கள், பேணிகள், அடைக்கும் பெட்டிகள், பீப்பாய்கள் ஆகியன பிரசித்த ஏலவிற்பனை மூலம் மருதானைப் புகையிரதக் களஞ்சியப்பகுதியில் ஆகஸ்ட் 7 ம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு விற்கப்படும்.

பொருட்கள் விற்ற நாளில் இருந்து மூன்று நாட்களுக்குள் அகற்றப்படாத பொருட்களுக்கு, மேற்பட்ட நாட்களுக்கு நாளொன்றுக்கு 50 சதம் வீதம் குதவாடகை அறவிடப்படும்.

புகையிரதக் களஞ்சியப் பகுதி,
கொழும்பு 10,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 20 ந உ.

எம். சரீன்,
புகையிரதக் களஞ்சியப் பகுதி அதிகாரி.

7–1121—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917.

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

### கேள்விப்பத்திர விளம்பரத் திருத்தம்

*யாழ்ப்பாண மாவட்ட சாராயக் குத்தகை விற்பனை—1970/71*

*17.7.70 ம் திகதிய 14,915 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண மாவட்ட சாராயக் குத்தகைக்கான கேள்விப் பத்திர விளம்பரத்தின் 3 ம் பந்தியில் குறிக்கப் பட்டுள்ள முடிவுதேதி கீழ்க்காணும் வகையில் திருத்தப்பட்டிருக்கிறதென்று இத்தால் அறியத்தருகிறேன்.*

*"1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ம் திகதி வியாழக்கிழமை ஒவ்வொரு தவறணையின் பெயருக்கெதிரே குறிக்கப் பட்ட நேரத்துக்கு கேள்வி விற்பனவு முடிவடையும்".*

*யோ. மு. சபாரத்தினம்,*
*பதில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்.*

*கச்சேரி,*
*யாழ்ப்பாணம்,*
*22.7.1970.*

*7-1164—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917*

---

## சாராயத்தவறணை குத்தகை விற்பனவு—1970/71

### அம்பாறை மாவட்டம்

கீழ்க்காணும் சாராயத்தவறணை 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ம் திகதிவரை சாராயம் சில்லறையாக விற்பனை செய்வதற்கு பிரத்தியேக உரிமைக்குரிய கேள்வி விண்ணப்பப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஒகஸ்து மாதம் 30 ம் திகதி வரை மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) 1970 ம் ஆண்டு சித்திரை மாதம் 17 ந் திகதியிடப்பட்ட 14,902 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான சாராயக் குத்தகை நிபந்தனைகளுக்கும் ;

(ஆ) மதுபானத்தீர்வை உத்தரவுப் பத்திரங்கள் அனைத்திற்கும் ஏற்புடையவாய தற்போதைய பொது நிபந்தனைகளுக்கும் அமைய.

2. கீழ்க் குறிப்பிடப்பட்ட தவறணை ரூபா 3,000 வீதம் யாதேனும் ஒரு கச்சேரியில் கட்டப்பட்ட பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரத்துடன் அணைத் திருத்தல் வேண்டும். ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் கோருவோரின் பூமி, ஆதனம் இருக்கும் பகுதியிலுள்ள இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடும் தொகைக்கு 25 வீதத்திற்குக் குறையாத பெறுமதிச் சான்றிதழ் அணைக்கப்படல் வேண்டும். இதில் குறிப்பிட்ட பூமி, ஆதனம் முதலியவற்றை அதற்கான பெறுமதிச் சான்றிதழ் பெற்றதன்பின் விற்பதோ மாற்றுவதோ ஒப்பந்தத்திற்கான நிபந்தனையை மீறுவதாகும்.

3. யாதேனும் கச்சேரி அல்லது கொழும்பு மதுவரி அதிகாரியின் காரியாலயத்தில் அல்லது திருகோணமலை மதுவரி உதவி அதிகாரியின் காரியாலயத்தில் அல்லது மட்டக்களப்பு வட்டார மதுவரிக் காரியாலயத்தில் பெறப்பாலனவாய மாதிரிப் பத்திரங்களில் ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. 1970 ம் ஆண்டு ஒகஸ்து மாதம் 30 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு குறிப்பிட்ட இறுதி நேரத்தில் தவறணை ஒப்பந்தக் கேள்வியாளர்கள் சகலரும் இக்கச்சேரியில் சமூகமாயிருக்க வேண்டும். மேலதிக விபரங்களை அம்பாறைக் கச்சேரியில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கச்சேரி, அம்பாறை,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 21 ந் உ.

பிராட்மன் வீரகோன்,
அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்டம்.

அனுமதிபெற்ற தவறணையின் நிரல் பின்வருமாறு

| தொ. இல. பிரிவு | தவறணை தெரிவுசெய்யப்படும் உள்ளூர் பிரதேசம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்க முடிவடையும் நேரம் |
|---|---|---|
| 1. கரவாகுப்பற்று .. | பெரியநீலாவணைக் கிராமத்துக்குள் .. .. .. | மு. ப. 10.00 |

7–1182—31.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,917

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர்,** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகள் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **யூன்** | 5. 6.70 | வெள்ளி | 29. 5.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 6.70 | வியாழன் | 5. 6.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 6.70 | வியாழன் | 11. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 25. 6.70 | வியாழன் | 18. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| **யூலை** | 2. 7.70 | வியாழன் | 25. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 10. 7.70 | வெள்ளி | 2. 7.70 | வியாழன் | ந.ப | 12 00 |
| | 17. 7.70 | வெள்ளி | 10. 7.70 | வெள்ளி | ந.ப | 12.00 |
| | 24. 7.70 | வெள்ளி | 17. 7.70 | வெள்ளி | ந.ப | 12.00 |
| | 31. 7.70 | வெள்ளி | 24. 7.70 | வெள்ளி | ந.ப | 12.00 |
| **ஓகத்து** | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** | 4. 9.70 | வெள்ளி | 28 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒற்ரோபர்** | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **நவெம்பர்** | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப | 12 00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப | 12.00 |
| **திசெம்பர்** | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3 30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
**1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.